Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 28 சனிக்கிழமை (13.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 318



சமூகம் மேன்மை அடைய...

04



மனித உரிமைகள் பேசும் அருகதை...

08



காத்து போனால்?

11



சொந்தக் காலில் நிற்க வேண்டும்.

09

# பளை, மாசார் பாடசாலைகள் போருக்குப் பின் புதுப்பொலிவு








**யுத்தத்தால் முற்றாக சிதைவடைந்த பளை மத்திய கல்லூரி மற்றும் மாசார் அ.த.க. பாடசாலை ஆகியன புதுப்பொலிவுடன் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இவ்விரண்டு பாடசாலைகளும் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நேற்றைய தினம் திறந்துவைக்கப்பட்டன.**

வடக்கில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் அரசின் திட்டத்தின் கீழ் மேற்படி பாடசாலைகளையும் நிர்மாணம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டது. இதற்காக அவுஸ்திரேலிய அரசிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அந்த நாட்டு அரசிடம் யுனிசெவ் நிறுவனமும் உதவியளிக்க முன்வந்தன.

இந்த உதவிகளைப் பயன்படுத்தி அழகுற அமைக்கப்பட்ட இவ்விரு பாடசாலைகளும் நேற்று உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த யுத்த காலத்தில் முற்றாக அழிந்த இப்பாடசாலைகள் 2010 ஆம் ஆண்டு முதல் மரநிழல்களிலும் தற்காலிக கொட்டில்களிலும் இயங்கிவந்தன.

நேற்றைய வைபவத்தில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் (15 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் மர்ம மனிதன் பீதி

## இரவுநேர ஊடரங்கு அமுல்



கிழக்கு மாகாணத்தில் அனேகமான இடங்களில் கடந்த சில நாட்களாக மர்ம மனிதன் தொடர்பான பீதி மக்கள் மத்தியில் தொடர்கின்றது. இதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், திருக்கோவில் பகுதிகளில் மர்ம மனிதர்கள் விவகாரம் காரணமாக பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. பொலிஸ் நிலையங்களைச்சுற்றித் திரண்ட பொது மக்களை கலைப்பதற்கு பொலிஸார கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

**துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி**

இச் சம்பவங்களில் குறைந்த பட்சம் ஒருவர் பலியானதுடன் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர.

விநாயகபுரத்தில் மர்மமனிதர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் நேற்று பிற்பகல் இருவரை பொது (15 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.தனியார் பஸ்களில் பயணச்சீட்டு அறிமுகம்

யாழ். மாவட்டத்தில் தனியார் பஸ் பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்கும் நடைமுறை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மீண்டும் வரவுள்ளதாகவும் இது தொடர்பாக கண்டிப்பான நடைமுறைகளைப் பின்பற்ற விருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தனியார் பஸ் பயணிகளுக்கு நடத்துநர்கள் பயணச்சீட்டை வழங்குவது தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு சீருடை வழங்குவது தொடர்பான (15ஆ ம்பக்கம் பார்க்க)

# எம்மை அரசியலுக்காக பயன்படுத்த வேண்டாம்

## அனோமா வேண்டுகோள்



தனது கணவரையோ அல்லது தன்னையோ குறுகிய அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என சரத்பொன்சேகாவின் மனைவி அனோமா கோரியுள்ளார்.

நடைபெறவுள்ள கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் மேயர் வேட்பாளராக போட்டியிட உள்ளதாக வெளியாகும் செய்திகளில எவ்வித உண்மையும் கிடையாது. போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்தாகக் குறிப்பிடப்படும் தகவல்களிலும் உண்மையில்லை. இது குறித்து பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவில்லை என அவர் கூறியுள்ளார். கணவர் சரத்பொன்சேகாவை விடுதலை செய்வதே தமது பிரதான இலக்கு என அவர் மேலும குறிப்பிட்டுள்ளார்.

# மடுமாதா தலத்திற்கு பாதயாத்திரை

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள மக்கள் மடுமாதா திருத்தலத்திற்கு நேற்று முன்தினம் பாதயாத்திரையாகச் சென்றுள்ளனர்.

மேற்படி பிரதேசத்திலிருந்து வழமையாக மடுமாதா ஆலயத்திற்கு மக்கள் பாதயாத்திரையாகச் செல்வது வழக்கம். அந்த வகையில் இப்பிரதேசத்திலுள்ள 50 இற்கு மேற்பட்ட மக்கள் ஒட்டுசுட்டான் சிவன் ஆலயத்திலிருந்து அதிகாலை 5 மணிக்குப் புறப்பட்டு மாங்குளம் ஊடாக தமது பாதயாத்திரையை மேற்கொண்டுள்ளனர். இவ் அடியார்கள் மடுமாதா ஆலயத்தைச் சென்றடைய 3 தினங்கள் ஆகும் என தெரிவிக்கப்படுகிறது. (101)

# தமிழகத்தில் நில நடுக்கம்

திருச்சி, சேலம், கடலூர், பிரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் நேற்று காலை 11-30 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது, அதிர்ச்சியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இன்னும தெரியவராத நிலையில் பெரும்பாலான வீடுகள் விரிசல் கண்டுள்ளதாகவும், கள்ளக்குறிச்சியில் ஆறுமுகம் என்பவர் மரணமடைந்துள்ளதாகவும் தெரிகிறது. நில அதிர்வின் போது இவர் மாரடைப்பால் இறந்திருக்கவேண்டும் என தெரிகிறது. மேலும் இப்பகுதிகளில் உள்ள பள்ளிகள் அனைத்திற்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

# வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை



(நெல்லியடி)

பருத்தித்துறை பொதுச் சுகாதார பிரிவுக்கு உட்பட்ட நெல்லியடி பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

நெல்லியடி பிரதேசத்தின் ஐயனார் கோவில், முருகன் கோவில் மற்றும் குறித்த சில பொது இடங்களில் வைத்து நேற்றைய தினம் ஆண், பெண் நாய்களுக்கான கருத்தடைச் சிகிச்சை, பொதுச்சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப் பட்டது. இந்தக் கருத்தடைச் சிகிச்சையில் பெருமளவானோர் தமது வளர்ப்பு நாய்களைக் கொண்டு வந்து கருத்தடைச்சிகிச்சைகளை மேற்கொண்டனர். (17)

# ஐரோப்பாவில் விடுமுறை யாழ்ப்பாணத்தில் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லைக் கந்தன் ஆலயத் திருவிழா வில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகளில் தங்கியிருக்கும் புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் யாழ்ப்பாணத்திற்கு படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

வெளிநாடுகளில் ஓகஸ்ட் மாததத்திற்கான பருவ கால விடுமுறையைப் பயன்படுத்தி இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புகின்றனர்.

ஆலய திருவிழாவிற்கும், தமது உறவினர்களைப் பார்ப்பதற்கும் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் தினமும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைவதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி)



## சிறு விளம்பரம்


தேர்தல் திணைக்களம்

**அலுவலக அலுவல் உதவியாளர் பதவி**

யாழ்.பூபாலசிங்கம் புத்தக சாலை மற்றும் குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மேற்படி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் விண்ணபபியுங்கள். விண்ணப்ப முடிவு திகதி : 31.08.2011 ஆகும். சி.என். எச்.சாள்ஸ். (படிவ விநியோகஸ்தர்) C/557


# இளைஞன் மீது கத்தி வெட்டு யாழ்.சோனகத்தெருவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சோனகத்தெருப் பகுதியில் இளைஞன் ஒருவர் மீது சரமாரியாக கத்தியால் வெட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சோனகத் தெரு கல்லூரி வீதிப் பகுதியைச் சேர்ந்த பனாஸ் அஸ்லம் (வயது -20) என்பவரே கத்திவெட்டுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞன் நோன்பு நோற்றுவிட்டு வீட்டிலிருந்த வேளையில் இவரது தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்துள்ளது. அவ்வழைப்பினைத் தொடர்புகொள்ளவே தாயைத் தொடர்புபடுத்தி அவதூறான வார்த்தைகளால் தொடர்புகொண்ட அந்த நபர் பேசியுள்ளார். இவ்வாறு பேசிய இளைஞனை இனங்கண்டு விசாரிக்கச் சென்ற வேளை அவ்விளைஞன் தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால் குறித்த இளைஞனை வெட்டியுள்ளார். கையிலும்,மார்பிலும் காயப்பட்ட இளைஞன் தானாகவே வைத்தியசாலைக்கு வந்ததாக அறிய முடிகிறது.

இது குறித்து யாழ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எப்.எஸ்), (எஸ்)

## மாவட்ட விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கிளி நொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதம விருந்தினராகவும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் ஸ்ரீகாந்தரூபன் விமலேஸ்வரி, வன்னி மாவட்ட கியுடெக்-கரித்தாஸ் நிறுவனப் பணிப்பாளர் வணபிதா அருளானந்தம் யாவிஸ் ஆகியோா சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (29)

## விபத்தில் சிக்கியது முச்சக்கர வண்டி

யாழ்.பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவை முதலாம் குறுக்கு வீதியின் ஊடாக வேகமாக வந்த கூலர் வாகனம் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியதில் ஓட்டோவின் முன்பகுதி சேதமடைந்ததுடன், அதில் பயணம் செய்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்ற இம்சம்பவத்தில் கிளிநொச்சியில் இருந்து யாழ்.போதனா வைத்தியாசாலைக்கு பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவும், மீன் ஏற்றுவதற்காகச் சென்ற கூலர் வாகனமுமே விபத்தில் சிக்கியது.

சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் குறித்த கூலர் வாகனத்தை தடுத்து வைத்து விசாரணகளை மேற்கொண்டனர்.




**நிச்சயமாக எவர் ஈமான் கொண்டு நற்செயல்கள் செய்கின்றனரோ அவர்களுக்கு றஹ்மானாகிய அல்லாஹுத ஆலா (இவ்வுலகிலேயே) நேசத்தை ஏற்படுத்துவான். அவர் மீது அன்பு கொள்கின்றான். ஜிப்ரீல அலை ஹிஸ்ஸலாமும் ஏனைய மலக்குமார்களும் அன்பு வைக்கின்றார்கள். (105)**



# நல்லூர் ஆலயச் சூழலில்...

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் முருகன் மஹோற்சவ காலத்தில் இளங்கலைஞர் மன்றத்தினால், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கு நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வில் பத்தாம் நாளான இன்று பொன் ஸ்ரீவாமதேவனின் பாட்டுக்கச்சேரியில்,

வயலின் - கே.குகபரன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, மோர்சிங் - எஸ்.செந்தூரன் ஆகியோர் அணிசேர் கலைஞர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

❖ ❖ ❖ ❖

'சொண்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன், 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவில் பத்தாம் நாளான இன்று "குருவாய் வருவாய்" என்னும் விடயம் பற்றி சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

❖ ❖ ❖ ❖

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீகச் சிந்தனையுடன் தினமும் மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை நடாத்தும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் பத்தாம் நாளான இன்று "கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகன்" என்னும் விடயம் பற்றி காரை எம்.பி.அருளானந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

கலைநிகழ்வுகளில் மற்றும் வடலியடைப்பு இருந்து இளைஞர் சங்க அறநெறிப்பாடசாலை மற்றும் தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

# வவுனியாவில் உண்ணாவிரதம்

(வவுனியா)

வவுனியா நகர சபைக்குச் சொந்தமான பட்டாணிச்சி புளியங்குளம் மையாவாடிக்குள் நகரசபையின் அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் கட்டப்படும் கட்டட வேலைகளை உடன் நிறுத்தக் கோரியும், நகரசபைத் தலைவர், உப தலைவர் ஆகியோருக்கு கடிதம் மூலம் விடுக்கப்பட்டுள்ள மரண அச்சுறுத்தலைக் கண்டித்து நேற்றைய தினம் வவுனியா நகரசபை முன்றலில் நடைபெற்ற அடையாள உண்ணாவிரதம் 11.00 மணியளவில் நிறைவு பெற்றது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பித்த இந்த உண்ணாவிரதத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், நகரசபை தலைவர் ஐ.கனகையா, உப தலைவர் எம்.எம்.ரதன், எதிர்க்கட்சித் தலைவர் சு.குமாரசுவாமி உள்ளிட்ட நகர சபையின் பணியாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் நெடுங்கேணி பிரதேச சபை பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (39)


# மானிப்பாய் வாள்வெட்டு வயோதிபர் படுகாயம்

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் இடிகுண்டு வீதியில் நேற்று அதிகாலை 1.00 மணியளவில் வீடொன்றினுள் புகுந்த மர்ம நபர்கள் அவ்வீட்டில் உறக்கத்தில் இருந்த வீட்டின் உரிமையாளரைச் சரமாரியாக வாளினால் வெட்டிப் படுகாயப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் வேறு யாரும் இல்லாத சமயம் நடைபெற்ற இச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த கிருஸ்ணன் பேரின்பநாதன் (வயது-58) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு வாள் வெட்டிற்கு இலக்காகியுள்ளார். இவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த நபரின் கழுத்து, முகம் உட்பட்ட தலைப்பகுதி முழுவதுமாக வாள் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

பாரிசவாத நோயாளியான இவர் மீது மேற்கொள்ளப்பட்ட மர்ம மனிதர்களின் தாக்குதல் குறித்து அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர்.



பண்டைய யாழ்ப்பாணத்தின் அடையாளச் சின்னங்கள் பல அழிவடைந்த பின்னரும் இன்னமும் எஞ்சியிருக்கும் சில தொல்லியல் சான்றுகள் இவை. கொழும்புத்துறை இலந் தைக் குளம் பிள்ளையார் ஆலயச் சூழலில் காணப்படும் ஆவுரஞ் சிக்கல்லையும், சுமைதாங்கியையும் இங்கே காணலாம். (52)


सत्यमेव जयते

**THE INDEPENDENCE DAY OF INDIA**

On the occasion of the independence day of india. A flag-hoisting ceremony will be held on monday, 15 August 2011 at 09 am at 280, palaly road, Jaffna.

All indians are cordially invited to attend.

(C/859)

வேலை செய்யாமல் அரைநொடி கூட இருக்கக்கூடாது. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் உனக்கென்று இறைவனால் தரப்பட்டுள்ள பணியை செய்து கொண்டே இருக்கவேண்டும்.

-பாராதியார்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பகைவனுக்கு அருளும் நெஞ்சு எங்கே?

உணர்ச்சிகரமாக நாலு வார்த்தை பேசி வெறுப்பேற்றி, மக்களை இனவாதத் தீயில் எரியவிட்டு வாக்குகளை அள்ளினால் போதும் என்ற முயற்சியிலேயே தொடர்ந்துமிருப்பவர்கள் பேச்சுமுறிந்ததைப் பெருமிதத்தோடு அறிவித்துவிட்டுக் காணாமல் போயுள்ளார்கள். இனி மக்கள் இந்தியா வரும் அமெரிக்கா வரும் என்று காத்திருக்க வேண்டியதுதான். அவர்களது வீர வசனங்களுக்குப் பின்னால் 'சர்வதேசம் வரக் காலம் கனியுது' என்பதே உள்குத்தாக இருப்பதாக மக்கள் காலத்துக்குக் காலம் நம்ப வைக்கப்படுகிறார்கள்.

கங்கை கொண்டு கடாரம் வெல்லவும் கடல் கடந்து சென்று ஆதிக்கம் செய்யவும் ஆயிரமாயிரமாய் மக்களை மடியவிட்டு வளம்நிறை ஊர்களை எரியவிட்ட அதே 'தமிழ்வீர' நினைப்புகளிலேயே இப்போதும் வாழ்வை மறந்துவிட்டு மக்களைப் வதங்கியழியச் சொல்வது தவிர வேறு வழி தெரியவில்லை இவர்களுக்கு. இன்றைய உலகை ஒட்டி ஒரு வாழ்வுக்கு அழைத்துச் செல்ல முடியவில்லை. இவ்வளவு கஷ்டங்களைச் சுமத்தி சமூகத்தைப் பாடுகேடாய் வீழ்த்திய பிறகும் 'வீர' ஏமாற்றை விடுவதாயில்லை இவர்கள்.

எதிர்த்தரப்பு மீதான வெறுப்பையும் ஆக்ரோசத்தையும் பகையுணர்ச்சியையும் வற்ற விடாமல் பார்த்துக் கொள்வதன் மூலம், எந்தத் தவறுகளால் சமூகத்திற்கு இந்தப் பாடழிவு உண்டானது என்பதைப் பார்க்கவோ பேசவோ விடாமல் தந்திரமாகத் தடுத்து வருகிறார்கள். விட்ட பிழைகளையும், நம்மை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்ற முட்டாள்த்தனமான பாசிச ஒத்தூதல்களையும் பற்றி எந்தச் சுயவிமர்சனமும் செய்துகொள்ளாமல், இப்போதும் மக்களைக் கருக்கும் பகைவெறுப்பு நெருப்பை மூட்டி மூட்டியே குளிர்காய்ந்து வருகிறார்கள்.

நமது பிழைகளை மனந்திறந்து விவாதிக்காமல் உணர்ச்சியில் குமிழியிட வைத்து அழைத்துச் செல்ல முற்படுபவர்கள் நம்மைச் சரியான பாதையில் கொண்டு செல்வார்களா? அல்லது நட்சத்திரங்களைக் காட்டியபடியே மேலேற வகை தெரியாத சாக்கடைக்குள் நடக்க வைக்கப்படுகிறோமா? என்பது பற்றியெல்லாம நமது புத்திஜீவிகள் இப்போதாவது வாய்திறக்க வேண்டாமா?

வன்முறை வழி மூலம் மனிதர்கள் மேலான ஒரு வாழ்க்கைக்குச் செல்ல முடியும் என்பதிலுள்ள அபத்தத்தை விளக்கும் பல வரலாறுகளும், இலக்கியங்களும், மாந்தர் அவலங்களும் நமக்கு ஏற்கனவே தெரிந்திருக்கின்றன. ஆனால் உணர்ச்சிகரமும் குமும ஆவேசமும் கொண்டதாகத் தயாரிக்கப்படும் ஒரு திரையால் அவை எளிதாக மறைக்கப்பட்டு மனிதகுலம் மீண்டும் மீண்டும் விவேகமற்றுச் சரிந்து வீழ நேர்கிறது.

பேசிப் பேசி பேச்சுச் சரிவராது என்ற முடிவுக்கே சுழன்று வந்து சேருபவர்கள், இளைஞர்களுக்கு மீண்டும் வன்முறையே கதி என்ற திசைகாட்டலையே காட்டிவிடப் பார்க்கிறார்கள். நடைமுறைச் சாத்தியமான தீர்வு அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க முடியாத ராஜதந்திரத் தோல்வியை வன்முறை வசனங்களால் மறைத்துவிடப் பார்க்கிறார்களல்லவா? இதுதெரிந்தும் நம்மிடையே மெத்தப் படித்தவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் எனப்படுவோர் ஏன் மக்களுக்கு இதுபற்றி ஏதும் எச்சரிக்காதிருக்கிறார்கள்?

இவர்களின் படிப்பெல்லாம் சமூகத்துக்கோ, குரலற்ற மக்களுக்கோ, மனித அறங்களுக்கோ எப்பனும் உதவாமல் 'கொள்கை உருவாட்டம்' ஏறிப் புத்தி மறந்தவர்களாக இருப்பது ஏன்? படிப்பு, புத்திஜீவிதம், கொள்கைப் பிடிப்பு, பிரமுகத்தனம் போன்றவை இருந்துவிட்டால் மட்டும் மனிதர்கள் பண்பட்டவர்கள் என ஆகிவிடுவதில்லை என்பதையே நாம் கண்டுகொள்கிறோம்.

குஜராத் படுகொலைகள் பார்த்து விரக்தியுற்று எழுதிய அஷிஸ் நந்தியின் கருத்துக்கள் நமக்கும் பொருந்துவதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

"என்றேனும் ஒரு தலைமுறை தோன்றலாம். சுயநலம் சார்ந்தோ அல்லது பகைமை வாழ்க்கையில் வெறுத்துப் போயோ அந்தத் தலைமுறை பரஸ்பரம் சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ளும். அது வரையிலும் நாம் பொறுமையுடன், ஆனால் வாளாவிராமல், மதிப்பீடுகளைக் கைவிட்டு விடாமல், காத்திருக்க வேண்டியிருக்கும். ஏதோ ஒரு கட்டத்தில் ஓரளவேனும் மனமாறுதல் ஏற்பட்டு, தவறுகளுக்காகப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்ற தேடல் தோன்றும். இந்த மாநிலத்தின் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் கலாசாரத்தை குஜராத்திப் பாரம்பரியம் இறுதியாக வென்றெடுக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருப்போம்."

நாமும், 'உலக மனிதர் யாவரும் நம் உறவினர்' என்றும் பகைவனுக்கும் அருளும் நெஞ்சும் கொண்ட நம் பாரம்பரியத்தை நம்பிக் காத்திருப்போம்.

- ஆசிரியர்

# குடாநாட்டில் உற்பத்தியாகும் "கள்" தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படும்

## மதுவரி நிலைய அதிகாரி கிருபாகரன் தகவல்

(யாழ்ப்பாணம்)

பனைதென்னை வள கூட்டுறவு சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் "கள்" இனை தென்பகுதியிற்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மதுவரி நிலைய அதிகாரி கிருபாகரன் தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் இந்த உற்பத்தியில் ஈடுபடுவோர் உரிய முறையில் போத்தல்களில் அதனை அடைத்து கூட்டறவு சங்கங்களில் ஒப்படைக்க வேண்டும் இதனைத் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இத்தொழிலில் ஈடுபடுவோர் அதிகளவு வருமானத்தை ஈட்ட முடியும்.

வடபகுதியில் காணப்படும் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அக்கறையுடன் செயற்பட்டு உரிய முறையில் உரிய காலங்களில் அவற்றை நடைமுறைப்படுத்தினால் அதிகளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

யாழ்.குடாநாட்டில் 16 பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன. இச்சங்கங்கள் தத்தம் பிரதேசங்களில் தமது உறுப்பினர்களிடம் இருந்து இவற்றைக் கொளவனவு செய்து தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யமுடியும் இந்த நடவடிக்கைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமல்லாது தொழிலாளிகளும் அக்கறையுடன் செயற்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

## அதிகாரிகள் விடுவிப்பு

(கொழும்பு)

அம்பாறை பகுதியில் யானைகள் கணக்கெடுப்பிற்கு சென்றிருந்த போது மக்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு அதிகாரிகள் பொலிஸாரின் தலையீட்டில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யானைகள் கணக்கெடுப்பிற்காக நேற்று முன்தினம் மாலை அம்பாறை மாணிக்க மடு வனப் பகுதிக்கு சிவில் உடையில் சென்ற பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பிரதேச மக்களால் தடுத்து வைக்கப்பட்டார்.

இந்நிலையில் அம்பாறை தமண இறக்காமம் பகுதியில் யானைகள் கணக்கெடுப்பிற்காக சென்ற மற்றொரு அதிகாரியொருவரும் பொது மக்களால் தடுத்து வைக்கப்பட்டார். இந்த இருவருமே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# நெல்லியடியில் பட்டப்பகலில் மோட்டார் சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் புடவை நிலையம் ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ள சம்பவம் கடந்த புதன்கிழமை பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கரணவாய் கிழக்கைச் சேர்ந்த சவிதா மலர் என்ற பெண் குறித்த பகுதியிலுள்ள இரத்தினம் புடவையகத்திற்கு புடவை எடுப்பதற்காக கடைக்கு முன்னாள் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு எடுக்கச்சென்றுள்ளார்

புடவைகளை கொள்வனவு செய்துவிட்டு வந்து பார்த்த போது அவ்விடத்தில் விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயிருந்தது. இதனை அடுத்து குறித்த பெண் உடனடியாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் பொலிஸார் தேடுதலில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)

# போக்குவரத்து நெருக்கடியினால் இடை விலகும் மாணவர்கள்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள கிராமப்புற பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடி காரணமாக இடைவிலகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே உள்ள போக்குவரத்து நெருக்கடியே மாணவர்கள் இடை விலகுவதற்கான காரணமாக உள்ளதாக பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

கிராமப்புற மாணவர்களுக்கு உதவி நிறுவனங்கள் மூலம் துவிச்சக்கரவண்டி போன்ற உதவிகளை வழங்கும் போது மாணவர்கள் இடைவிலகும் தன்மை குறைவடையும் எனவும் அதிபர்களால் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் இடைவிலகல் தொடர்பாக துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையினரால் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அதிபர்கள் தெரிவித்துள்ளனர். (121)

## துறைமுகம் ஆழமாக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் ஆழமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கனரக வாகனங்கள் மூலம் கடற்பகுதியை ஆழமாக்கி புனரமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

துறைமுகப் பகுதியை ஆழமாக்கி வடதாரகை கப்பலை கடலில் கரைவரைக்கும் சேவையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வி)

# கத்தியால் இருவரை வெட்டி 6 பவுண் நகை, பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை வீடொன்றில் முகமூடி அணிந்து சென்ற திருடர்கள் வீட்டில் இருந்த இருவரைக் கத்தியால் வெட்டியதுடன் 6 பவுண் தங்க நகைகளையும் 27ஆயிரத்து 500ரூபா பணத்தினையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

வெட்டு காயத்திற்கு உள்ளான இரு வரையும் தந்தை, மகள் ஆகிய இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த வீட்டில் கழிவறை ஊடாக நுழைந்த திருடர்கள் அதிகாலை ஒரு மணியளவில் துணிகர திருட்டை புரிந்துள்ளனர்.

முதலில் குறித்த வீட்டில் தங்கியிருக்கும் பெண் ஒருவரின் அறைக்குள் புகுந்த திருடர்கள் கத்தியைக் காட்டி அவர் அணிந்திருந்த நகைகளை பறித்தெடுத்தனர் அப்பெண் கூக்குரலிடவே அவ் வீட்டில் இருந்த ஏனையோர் ஓடிவந்துள்ளனர்.

அவர்களை அச்சுறுத்தி அவர்கள் அணிந்திருந்த நகைகளையும், அங்கிருந்த 27ஆயிரத்து 500ரூபா ரொக்கப் பணத்தினையும் திருடிச் சென்றுள்ளமை குறித்த வீட்டில் தாய், தந்தை, மகள் வாடகைக்கு குடியிருந்த பெண் ஒருவர் உட்பட நால்வர் தங்கியருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# இருமாதங்களாக மூடப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கக் கிளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் பல.நோ.கூட்டுறவு சங்கத்தின் கீழுள்ள கண்ணகி புரம் ப.நோ.கூ சங்கக்கிளை கடந்த இரு மாதங்களாக மூடப்பட்டுள்ளதால் இப் பிரதேசத்திலுள்ள மக்கள் பொருட்களை கொள்வனவு செய்யமுடியாது நெருக்கடிகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள குடும்பங்கள் இக்கிளையிலேயே பொருட்களை கொள்வனவு செய்து வந்தனர். அத்துடன் 337 குடும்பங்கள் பங்கீட்டு அட்டைகள் மூலம் நிவாரணத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனினும் இக்கிளை மூடப்பட்டுள்ளதால் இந்த மக்கள் தமது தேவைகளை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர்.

இதைவிட இப்பிரதேசத்தில் வணிக நிலையங்களும் இல்லாததால் இம்மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து இக்கிளை திறப்பதற்கு ஆவண செய்யுமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (29)

# ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு சேவையே சமூகம் மேன்மையடைய உந்துசக்தியாகும்

## - ஆங்கில ஆசான் த.ந.பஞ்சாட்சரம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் சமூகத்தில் என்றும் முக்கியத்துவம் பெற்றவர்கள் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையே சமூகம் மேன்மையடைய உதவும். எனவே வாழ்நாள் முழுவதும் கற்பிக்கும் பணியை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என ஆங்கிய ஆசான் த.ந. பஞ்சாட்சரம் தெரிவித்துள்ளார்.


நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற செல்வி மதிவதனா இராமநாதனின் மணிவிழா நிகழ்வு பாடசாலை அதிபர் இ.பசுபதிஸ்வரன் தலைமையில் நடைபெற்ற போது சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

ஆசிரியர்கள், தாய் தந்தையர், விவசாயிகள் என் போருக்கு ஓய்வு என்பதே கிடையாது. இவர்கள் வாழ்நாள் முழுவதும் தாம் ஆற்றிய கருமங்களை மேற்கொள்ள வேண்டும்.

சமூகத்திற்கும் பாடசாலைக்கும் இடையில் உறவுப்பாலம் அமைப்பவர் ஆசிரியரே இவர்களது கற்பித்தலின் வெற்றியிலேயே பாடசாலையின் உயர்வு தங்கியிருக்கிறது. இன்று ஆசிரியத் துறையில் உள்ளவர்கள் பல்வேறு வேலைப் பளுக்களைச் சுமக்கிறார்கள். நிகழ்வில் நீர்வை மணி கு.தியாகராஜக் குருக்கள், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் இ. இராஜசேகரம், நீர்வேலி றோ.க. பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம், ஆசிரிய ஆலோசகர் அ. அருந்தவ ரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர். (10)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று மஞ்சத் திருவிழா



மஞ்சவிழா வன்று மாலையிலே பக்தரெலாம்
விஞ்சுபுகழ் நல்லூரின் வித்தகனை - நெஞ்சமெனும்
மஞ்சத்தி லேற்ற மயக்கமெலாம் போய்விடவே
எஞ்சுமவன் தஞ்சம் எமக்கு.

**- கந்தன் பாமாலை**

மஞ்சத்தில் மன்னவனைக் காண வாரீர்
அஞ்சேலேன அபயம் தந்து காத்திட
நெஞ்சத்தில் நிறைந்த நல்லைக் குமரன்
விஞ்சும் எழில் பொங்கி மஞ்சத்தில் வரவே
தஞ்சம் புகுந்தவன் தாள்களைப் பணிந்திடுவோம்.

**- காரை எம்.பி. அருளானந்தன்.**

தஞ்சமென வந்து உந்தன் திருப்பாதம் தொழுதோம்
மஞ்சமதிலேறி நீ மனமகிழ்ச்சியுடன் வருவாயே!
அஞ்சுகரமுடைய ஐங்கரனின் ஆசைத்தம்பியே!
கெஞ்சுகிறோம் எம்வாழ்வில் வசந்தம் வீச அருள் புரிவாய்!.

**- இராசையா ஸ்ரீதரன்.**

வள்ளியுடன் தெய்வானையும் - ஊர்
சுற்றி மஞ்சத்தில் வலம் வருவாய் - முருகா!
அள்ளி அள்ளிப் பக்தருக்கு - அவர்
குறை என்றும் தீர்ப்பாய். முருகா!

**- இ.சிவ உமாகரன் (இணுவில்)**

அஞ்சும் எங்கள் வாழ்வைப் போக்கி-
அகத்தில் நல்ல தெளிவைக் காட்டு.
மஞ்சம் வீதி மருவிச் செல்லும்
மாட்சி கண்டே மனமும் தேறும்.

**- மூலபாரதி.**

## எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு புதிய இயந்திரம் பொருத்தல்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பல.நோ.கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் ஒரே தடவையில் 2 வாகனங்களுக்கு பெற்றோல் நிரப்புக் கூடிய நவீன எரிபொருள் நிரப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

24மணி நேரமும் இயங்கிவரும் இந்த நிலையத்திற்கு மக்கள் வருகை தருவதாகவும் இந்த செயற்பாட்டினால் மக்கள் விரைவாக எரிபொருளை நிரப்பக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையத்திற்கு அருகிலிருந்த சுமார் 100 வருடங்கள் பழமை வாய்ந்த இரும்புக் குழாய் கிண்டி எடுக்கப்பட்டு புதிய குழாய்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பொருத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (104)

## கேணி புனரமைப்பு


(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் கேணி ஆலய பரிபாலன சபையினரால் புனரமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது..

கடந்த யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருந்த இக்கேணியின் வெளி அமைப்பானது ஆரம்பகாலம் தொட்டு புனரமைக்கப்படாதிருந்தது.

தற்போது வெளி அமைப்பு புனரமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (101)

## மறைந்த பேராசிரியர் சிவத்தம்பிக்கு யாழ். இந்துவில் நினைவுப் பேருரை



(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழ்த்துறைப் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் நினைவுப் பேருரையும் தமிழிலக்கியம் தொடர்பான கருத்தரங்கும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் "ஆறுதல்" அமைப்பின் பிரதமநிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறுகின்றது.

பேராசிரியர் சிவத்தம்பியின் புலமை வளமும் தளமும் என்ற தொனிப்பொருளில் இந் நிகழ்வு இடம் பெறுகின்றது.

தொடக்கவுரையினை தெ. மதுசூதனனும், சங்க இலக்கியம் எனும் பொருள் பற்றி கலாநிதி மனோன்மணி சண்முகதாசும், நாடகம் என்ற பொருள் பற்றி மரியசேவியர் அடிகளாரும், நவீன இலக்கியம் என்ற விடயம் பற்றி யாழ். பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் அருந்தாசுதனும், உரையாற்றுவர். மொழி இலக்கியம், இலக்கிய விமர்சனம் பற்றி பேராசிரியர் அ.சண்முகதாசும், பேராசானுக்கு ஓர் இசைச்சமர்ப்பணம் எனும் பொருளில் கலாநிதி என்.கிருஷ்ணவேணியும், கற்பித்தல் முறையியல் பற்றி, கலாநிதி த. கலாமணியும், நல்லாசானாக எனும் விடயம் பற்றி வண.ஜெபநேசன் அடிகளாரும் சமுகவியளாளனாக எனும் பொருள பற்றி சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ் கண்ணாவும், பிணங்கியும் இணங்கியும் வளர்ந்த உறவு என்ற விடயம் பற்றி கலாநிதி சோ. பத்மநாதனும் உரையாற்றவுள்ளனர். (06)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்நிருபர்.)

காரை கிட்ஸ் பார்க் ஆங்கில மொழி மூல முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிட்ஸ்பார்க்கின் தலைவர் ஆசிரியர் கே.நேர்த்திரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

நல்லூர் பிரதேச செயலக உதவி பிரதேசசெயலர் அ.சோதிநாதன் சிறப்பு விருந்தினராகவும்,காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளர் இ.ஜெயராஜ், காரைநகர் வடக்கு,கிழக்கு கிராமசேவை அலுவலர் இ.திருப்புகழூர்சிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்கின்றனர். (10)

## மண்டைதீவு கிராமங்களுக்கு குழாய் நீர் வழங்க ஏற்பாடு

மண்டைதீவுக்கிராமத்திற்கு அல்லைப் பிட்டியில் இருந்து பரவைக்கடல் ஊடாக கொண்டுவரப்பட்டு வழங்கப்பட்டுவரும் நன்னீர் வினியோகத்திட்டம் அந்தக்கிராமத்தின் மத்திய பகுதியை அடுத்துள்ள கிழக்கு தெற்கு மற்றும் அம்மன்கோவில் சுற்றாடல் பகுதிகளில் வசிக்கும் மக்களும் பயன்பெறுமாறு விஸ்தரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கிராமத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தொட்டிகள் அனைத்துக்கும் குழாய்கள் பொருத்தும் வேலைகள் முடிவடையாததால் கொண்டகம், சித்தர் சந்தி, மகாவித்தியா லய முன்றல் ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டிருந்த தண்ணீர் தொட்டிகளில் மட்டுமே குழாய் மூலமான நன்னீரைப் பெறக்கூடியதாக உள்ளது.

ஏனைய பகுதிகளுக்கான நீர் வழங்கல் பௌசர் மூலமாகவே வேலணை செயலக மற்றும் பிரதேச சபை நிர்வாகத்தினரால் மேற் கொள்ளப்பட்டுவந்தது.

இந்தப் பகுதிகளில் உள்ள நீர் தொட்டிகளுக்கு குழாய் பொருத்தும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதால் கிழக்கே உதய சூரியன் ச[illegible] சமூக நிலைய மற்றும் வேப்பந்திடல் பகுதி குடியிருப்பாளர்களும் தெற்கே சாம்பலோடை வரையான மக்கள் குடியிருப்புக்களும் பயன் பெற இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (23)

## தெல்லிப்பளை மேற்கு சி.க.கூ. வருடாந்தப் பொதுக்கூட்டம்


தெல்லிப்பளை மேற்குச் சிக்கனக் கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம், இன்று சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு, பன்னாலை பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகச் சங்கச்செயலாளர் க.காங்கேயன் அறிவித்துள்ளார்.

சங்கத்தலைவர் செ. மகாதேவா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக கூட்டறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.குணாளனும், சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி கணக்காய்வுப் பகுதி உத்தியோகத்தர் செல்வி. செ. புளோரினும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கூட்டத்தில் நிதியறிக்கை சமர்ப்பித்தல் அங்கத்தவர் கடன் தொகை அதிகரித்தல், புதியநிர்வாக சபைத் தெரிவு என்பன இடம்பெறவுள்ளதால் அங்கத்தவர்களைத் தவறாது கூட்டத்திற்குச் சமூகமளிக்குமாறு செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (06)



யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய அலுவலர்களினால் 5 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. நிதியினை வழங்கிய வங்கி உத்தியோகத்தர்களை காணலாம். (எஸ்)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல-2 பாடசாலையில் நடைபெற்ற மாணவர் உளவிருத்திச் செயற்பாட்டில் மாணவர்கள் விருந்தினர்களை வரவேற்பதைக் காணலாம். (121)

# பனைவளத்தை உயிர்பெறச் செய்ய ஐம்பது இலட்சம் விதைகள் நடுகை

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் போர் காரணமாக அழிந்துபோன பனை வளத்தை மீளவும் உயிர் பெறச் செய்வதற்காக இந்த ஆண்டில் 50 இலட்சம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை வளர்த்துப் பயன்பெறுவோம் என்ற தொனிப் பொருளில் இந்த பனம் இந்த பனம் விதை நடுகைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் எமது அழிந்து போன பனை வளத்தை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

பனை மரத்தை தறித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படும் ஒருவருக்கு பிணை கூட வழங்கப்படமாட்டாது. எனவே, சட்டத்திற்குப் புறம்பான பனைமரம் தறிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (எஸ்)


# தியானமும் ஆரோக்கியமும் விழிப்புணர்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் நடத்தும் 'தியானமும் ஆரோக்கியமும்' விழிப்புணர்வு நிகழ்ச்சி காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை நடைபெற்று வருவதாக, பிரம்மகுமாரிகள் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இவ்விழிப்புணர்வு நிகழ்வு இல 251, கோவில் வீதி நல்லூர் என்ற முகவரியில் அமைந்துள்ள சுப்பிரமணிய சாஸ்திரியார் இல்லத்தில் நடைபெற்று வருகிறது.

இருநாள் இராஜயோக தியான வகுப்பு, ஆன்மீகமும் ஆரோக்கியமும் தொடர்பான 15 நிமிட பட விளக்கம், இசையுடன் கூடிய தியான அனுபவம், 30 நிமிட விவரணத் திரைப்படக் காட்சி, தியானப்பாடல்கள், தியானம் பற்றிய புத்தக விற்பனை, பொம்மலாட்டம் முதலான ஆன்மீக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்று வருகின்றன. (06)



மானிப்பாய் மொமோறியல் பாடசாலையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் மற்றும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழவில் அப்பாடசாலை மாணவியொருவருக்கு அருட்தந்தை பிரவின் அடிகளார் கற்றல் உபகரணங்களை வழங்குவதைக் காணலாம். (104)

# உயர்தரப் பரீட்சை உத்தியோகத்தருக்கு சிலிப் முறையில் கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளை சிலிப் முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சைத் திணைக்களத்தால் இதுவரை காலமும் நடத்தப்பட்டு வந்த பாடசாலைப் பரீட்சைகளுக்கும் நிறுவனம் சார் பரீட்சைகளுக்குமுரிய கொடுப்பனவுகள் காசோலை மூலமே வழங்கப்பட்டு வந்தன.

எனினும், காசோலை வழங்குவதில் பல்வேறு காரணங்களினால் காலதாமதங்கள் ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு சேவை வழங்குநர்களுக்கு விரைவாகக் கொடுப்பனவுகளை வழங்க சிலிப் முறையிலான நடைமுறை அறிமுகப்படுத்தப்படுவதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார். நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சேவை வழங்குநர்களின் வங்கிக் கணக்கிற்கே பணத்தை வைப்புச் செய்யும் முறையே சிலிப்முறையாகும்.

இதற்காகச் சேவை வழங்குநர்கள் வங்கிக் கணக்கை ஆரம்பித்திருப்பதும், வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முற்பக்க போடடோப் பிரதியையும், கொடுப்பனவுப் பத்திரத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். (06)

# பன்னிரு திருமுறை முற்றோதல்

(யாழ்.நிருபர்)

உலக அமைதி வேண்டி பன்னிரு திருமுறை திருப்புகழ் முற்றோதல் பெருவிழா கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவையில் நடைபெற்று வருகிறது. நல்லூர் மஹோற்சவ ஆரம்ப தினமான கடந்த வியாழக்கிழமை தொடங்கிய இந்நிகழ்வு தினமும் காலை 7.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெற்று வருகின்றது.

சமய தீட்சைபெற்று மாமிச போசனம் அற்றவர்கள் தங்கியிருந்து திருமுறை ஓதக்கூடியவர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு திருமுறை ஓதமுடியும என சைவசமய பாதுகாப்புப் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

# திறந்த பாடசாலை திறப்பு விழா

(நெல்லியடி)

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் சேர்க்கும் முகமாக வவுனியா வடக்கு கல்விப் பிரதேசத்தில் திறந்த பாடசாலை ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சிரேஷ்ட போதனாசிரியர் சிவராமகிருஸ்ணன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வு வவுனியா மரக்காரம்பனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இப்பாடசாலையை தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் திறந்து வைக்கவுள்ளார். இந்நிகழ்விற்கு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (12)

# மாதாந்த கூட்டம்

(ஓட்டுசுட்டான்)

கற்சிலைமடு மாதர் சங்க மாதாந்தக் கூட்டம் கடந்த 7ஆம் திகதி கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடை பெற்றது.

இக் கூட்டத்தில் கொமர்ஷல் வங்கியின் முல்லைத்தீவு கிளை அதிகாரிகளினால் பெண்களுக்கான சேமிப்பு மற்றும் குழுக்களாக இணைந்து இலாபகரமான செயற்பாட்டை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பெண்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (101)

# நல்லூர் ஆலயத்திற்கு வருவோர் கலாசார தூய்மை பேண வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய சூழலில் பக்தர்கள் கலாசார தூய்மையைப் பேணவேண்டும் என்று சமூக சமய ஆர்வலர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிலர் பாதணிகளுடனும் அலுவலக ஆடைகள் அணிந்தும் ஆலயத்திற்கு வருகை தருகின்றனர்.

இந்தச் செயல் தமிழரின் பாரம்பரியத்தை அவமதிப்பதாக உள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஆலயத்தின் தூய்மையையும், கலாசாரத்தையும் பேணி பாதுகாப்பது சகலரினதும் கடமையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(13.08.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆடி 28 ஆம் நாள்.

இராகுகாலம் 9.05–10.35, சுபநேரம் 3.05 –4.35,

நட்சத்திரம்: திருவோணம் மு.இ.07.09 வரை

திதி: பூரணை பி.இ 12.41 வரை.

பௌர்ணமி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனச் சஞ்சலம், தேக நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு.

ரிஷபம:– தேக ஆரோக்கியம், பண வரவு, தொழிலில் ஆதாயம், உறவினர் வருகை, தெரு விபத்து.

மிதுனம் :– பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, மனக்குறை, குடும்பத்தில் குழப்பம், நண்பர் தொல்லை.

கடகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தொழிலில் ஆதாயம், தேக ஆரோக்கியம், நண்பர் வரவு.

சிம்மம்:– பணவரவு, அதிகாரப் போட்டி, குடும்பத்தில் குதூகலம், திருமணப் பேச்சு, சுற்றத்தார் ஆதரவு.

கன்னி :– குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, கடன் வசூல், பெற்றோர் ஆசி, மனமகிழ்ச்சி.

துலாம் :– பணக் கஷ்டம், உடல் உபாதை, மருந்துச் செலவு, வசதிக் குறைவு, மனக்கவலை.

விருச்சிகம்:– உடல் உபாதை, பணக் கஷ்டம், தொழில் விருத்தி, நண்பர் தொல்லை, மனக்கவலை.

தனுசு:– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் ஆதாயம், மக்கள் ஆதரவு, வெளிநாட்டு உதவி.

மகரம:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தொழில் விருத்தி, தர்ம சிந்தனை, நண்பர் வருகை.

கும்பம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் சலனம், உடல் நலம் பாதிப்பு, இறை வழிபாடு, மனக் கவலை.

மீனம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தேக ஆரோக்கியம், திருமணப் பேச்சு, தர்ம சிந்தனை.

# யாழ். பஸ் நிலையத்திலிருந்து இரவு 9 மணிவரை சேவையை நீடிக்குமாறு பயணிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து இரவு வேளைகளில் புறப்படும் சகல பேருந்து சேவைகளும் 8 மணியுடன் நிறைவு பெறுவதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து இதுவரை 9 மணிவரை பேருந்து சேவை இடம்பெற்று வந்தது. இந்நேரமானது அண்மையில் மாற்றம் செய்யப்பட்டு இரவு 8 மணிக்கு இறுதிப் பேருந்து சேவை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கேற்ப நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதனால் வெளிமாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் பயணிகள் 8 மணிக்கு முன்னரே யாழ். பஸ் நிலையத்தை வந்தடைந்தால் மட்டுமே ஏனைய இடங்களுக்குச் செல்ல முடியும்.

இதேவேளை, முல்லைத்தீவு கிளிநொச்சி முதலான இடங்களிலிருந்து பிற்பகல் 4 மணிக்குப் புறப்படும் பேருந்துகளும் சிற்றூர்திகளும் இரவு 8 மணிக்கு முன்னரே யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையததை வந்தடைய வேண்டும்.

ஆனால், இந்த பேருந்துகள் குறிப்பிட்ட நேரத்தில் யாழ்ப்பாண மத்திய பேருநது நிலையத்தை வந்தடைவதில்லை. இதனால் யாழ்ப்பாணம் தவிர்ந்த சங்கானை, தெல்லிப்பளை, அச்சுவேலி, பருத்தித்துறை, கோண்டாவில் போன்ற பிரதேசங்களுக்குச் செல்லவேண்டிய பயணிகள் இரவு வேளைகளில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி, இப்போக்குவரத்துச் சேவையை இரவு 9 மணிவரை நேரத்தை நீடிக்குமாறு பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### கறுத்தக்கொழும்பான் மாம்பழத்திற்கு கிராக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்திற்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுக் காணப்படுகின்றன.

தென்பகுதியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் நகரில் கறுத்தப்கொழும்பான் மாம்பழத்தினைக் கொள்வனவு செய்வதற்காக அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.

மாம்பழத்தின் சீசன் அருகிச் செல்வதாலேயே மாம்பழத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றன. நகரில் ஒரு கறுத்தக் கொழும்பான் மாம்பழம் 90 ரூபாவாக விற்கப்படுகிறது. என்ன விலை கொடுத்தும் மாம்பழத்தை வாங்குவதில் சுற்றுலாப் பயணிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். (வி)

### கொங்கிறீட் கூரை வீழ்ந்து குடும்பஸ்தர் படுகாயம்

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதியில் வீட்டின கொங்கிறீற் கூரை (பிளேட்) விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் காலில் படுகாயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலை அவசர சிசிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் மதியம் 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் உடுவில் பகுதியைச் சேர்ந்த இ.கிருபாகரன் (வயது 42) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இவரது கால்பாதம் முற்றாகச் சிதைவடைந்துள்ளது. (எஸ்)

# வடமாகாணப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் வதிவிடப் பயிற்சி

(நெல்லியடி)

வடமாகாணப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளிலிருந்து தேசியமட்டப் போட்டிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு இடங்களையும் பெற்ற மெய்வல்லுநர் வீரர்களுக்கான நான்கு நாள் கொண்ட பயிற்சி முகாம் எதிர்வரும் 17 ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதிவரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி முகாமிற்குக் கொழும்பிலிருந்து வருகை தரும் பயிற்றுவிப்பாளர்களும், வடமாகாணத்திலிலுள்ள பிரதேச பயிற்றுவிப்பாளர்களும் இணைந்து பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறியினை வருடாந்தம் மாகாணக் கல்வித் திணைக்களம் ஒழுங்கமைத்து நடத்தி வருகின்றது.

இந்த வருடத்திற்கான பயிற்சி முகாம் வலய ரீதியாக பங்குபற்றவுள்ள வீரர்களின் விபரம் வருமாறு,

யாழ்.வலயம் - ஆண்கள் 38, பெண்கள் 10, வலிகாமம்- ஆண்கள் 25, பெண்கள் 37, வடமராட்சி - ஆண்கள் 13, பெண்கள் 11, தென்மராட்சி - ஆண்கள் 07, பெணகள் 11, தீவகம் - ஆண்கள் 03, பெண்கள் 02,

கிளிநொச்சி - ஆண்கள் 06, பெண்கள் 08, முல்லைத்தீவு - ஆண்கள் 07, பெண்கள் 12, துணுக்காய் - ஆண்கள் 04, பெண்கள் 06, மன்னார்- ஆண்கள் 29, பெண்கள் 21, மடு - ஆண்கள் 07, பெண்கள் 03, வவுனியா வடக்கு - ஆண்கள் 11, பெண்கள் 11, வவுனியா தெற்கு - ஆண்கள் 08, பெண்கள் 17. (12)

# கால்பந்தாட்ட இறுதியாட்டமும் பரிசளிப்பு விழா நிகழ்வும்

(நெல்லியடி)

வல்வை விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உதைபந்தாட்ட இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 3.30 மணிக்கு வல்வை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வல்வை விளையாட்டுக் கழகத்தின் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முன்னாள் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் வீரர் க.தேவசிகாமணி, சிறப்புவிருந்தினர்களாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் எம்.டி.வேதாபரணம், யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் பா.முகுந்தன், பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எ.வசந்தன், பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தலைவர் எ.அருளானந்தசோதி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் வீரர்கள் எஸ்.பூரணச்சந்திரன், வி.குகநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (12)

# மணற்காடு சென்.சேவியர் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி

(நெல்லியடி)

வல்வை விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் 9 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் மணற்காடு சென்.சேவியர் அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணி மோதியது.

இதில் ஆட்டம் தொடங்கியபோதே சென்.சேவியர் அணியினர் பந்தைத் தம்வசப்படுத்திக் கொண்டனர். இதனால் ஆட்டம் தொடங்கி 7 ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணியைச் சேர்ந்த பிரமேதாஸ் முதல் கோலைப் போட்டார். அதன் பின்னரும் 13ஆவது, 18ஆவது நிமிடங்களில் அதே அணியைச் சேர்ந்த அன்ரன், உதயதாஸ் ஆகியோர் ஒவ்வொரு கோலைப் போட இடைவேளைக்கு முன்னர் 3:0 என்ற கோல் கணக்கில் சென்.சேவியர் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது இமையாணன் அணி வீரர்கள் 10ஆவது, 14 ஆவது நிமிடங்களில் இரு கோல்களைப் போட சென்.சேவியர் அணியினர் அதிர்ச்சியடைந்தனர். அதன்பின்னர் இரு அணியினது ஆட்டமும் உச்சக் கட்டத்தை எட்டியது. அப்போது சென்.சேவியர் அணி வீரர்கள் தமது அணி வீரர்களின் வெற்றியை உறுதியாக்கும் வகையில் செபமாலை கனியூட், அன்ரனி அமலதாசன் ஆகியோர் மேலும் ஒவ்வொரு கோல்களைப் போட ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதனால் 5:2 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென்.சேவியர் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

# சென்.ஜோன்ஸ் - ஸ்கந்தா அணிகளின் பயிற்சிப் போட்டி செவ்வாய் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டங்களை முன்னிட்டு யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ பயிற்சி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இப்போட்டித் தொடர்களில் பிரிவு மூன்றின் 15, 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தப்படுகின்றது.

இந்த வகையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பயிற்சிப் போட்டி எதிர் வரும செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் . போட்டிகள் இரண்டாவது சுற்று ஆட்டங்களில் கலந்து கொள்வதற்கு நல்ல உந்து சக்தியாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டுச் செய்திகள்



அண்மையில் நடைபெற்ற கிளிநொச்சி அக்கராயன் வைகறை முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் சிறார்கள் கலந்து கொண்டிருப்பதைக் காணலாம். (121)

## செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின செயற்குழுக் கூட்டம் இன்று மாலை நடைபெறவுள்ளதாக அதன் செயலாளர் ஏ.எஸ். நிசாந்தன் தெரிவித்தார்.

இலக்கம் 310, நாவலர் வீதியில் அமைந்துள்ள கிரிக்கெட் அக்கடமியில் இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் முக்கியமான தீர்மானங்கள் மற்றும் எதிர்காலக் கிரிக்கெட் தொடர்பான முன்னேற்றமான பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும், இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## விளையாட்டு விழா

(கோப்பாய்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு கந்திஜி சனசமூக நிலையத் தலைவர் த.பேரின்பநாதன் தலைமையில் காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினும், சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ.ஜங்கரனும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி. கிழக்குப் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனமும், அகில இலங்கை காந்தி சேவா மன்ற யாழ்.கிளையின் தலைவர் கா.கார்த்திகேசுவும், கௌரவ விருந்தினர்களாக உரும்பிராய் புனித மைக்கேல் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு ஆ.யூட்நிக்சன், உரும்பிராய் கிழக்கு கிராம சேவையாளர் செல்வி.ரி.சியாமளாவும் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (08)

# பிறிமா வெற்றிக் கிண்ணத்திற்கான 4 நாள் பயிற்சி முகாம் இன்று நிறைவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படவுள்ள 15 வயதுப் பிரிவு மாவட்ட அணிகளுக்கிடையிலான பிறிமா வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடருக்கு யாழ்.மாவட்ட அணியைத் தெரிவு செய்வதற்கான நான்கு நாள் பயிற்சி முகாம் ஒன்று இடம்பெற்று வருகின்றது.

யாழ்.மாவட்டத் துடுப்பாட்டச் சங்கம், யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் மற்றும் யாழ்.மாவட்ட பயிற்றுவிப்பாளர் லக்சிகா ஆகியோரின் ஒழுங்குபடுத்தலின் மூலம் இப்பயிற்சி முகாம் நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி முகாம் கடந்த 10, 11ஆம் திகதிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும், நேற்றும் இன்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலுமாக நடாத்தப்படுகின்றது.

இப்பயிற்சி முகாமில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஸ்ரான்லிக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

இன்று நடைபெறும் இறுதிநாள் பயிற்சி முகாமில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மற்றும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி போன்ற பாடசாலைகளும் கலந்து கொளளும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதில் சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்தும் 20 பேர் கொண்ட அணி யாழ். மாவட்டம் சார்பாக தெரிவு செய்யப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பிறிமா வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் திருகோணமலையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசியக் கிண்ண ஹொக்கிப் போட்டி முதல் சுற்றில் இந்தியா-சீனா மோதல்

ஆசியக் கோப்பை ஹொக்கியில் இந்தியா தனது முதல் போட்டியில் சீனாவை சந்திக்கிறது. இப்போட்டி சீனாவின் ஓர்டாஸில் என்னும் இடத்தில் செப்ரெம்பர் 3 முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் இந்தியா, சீனா, ஜப்பான், கொரியா, மலேசியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

இதேபோல மகளிருக்கான ஆசிய ஹொக்கி சம்பியன் போட்டி இரண்டாவது ஆண்டாக தற்போது நடைபெறவுள்ளது. கடந்த போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய மகளிர் அணி செப்ரெம்பர் 4 இல் தனது முதல் போட்டியில் கொரியாவை எதிர்கொள்கிறது. மகளிர் பிரிவில் இந்தியா, கொரியா, ஜப்பான், சீனா ஆகிய நான்கு அணிகள் விளையாடுகின்றன.

# மகளிர் இரட்டையர் ரென்னிஸ் சானியா ஜோடி வெளியேறியது



(டொரண்டோ)

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் போட்டியின் முதல் சுற்றிலேயே சானியா - ரஷ்யாவின் எலினா வெஸ்னினா ஜோடி தோல்வியடைந்து வெளியேறியது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்த ஜோடி இத்தாலியின் சாரா இரானி - ராபர்டா வின்சி ஜோடியை எதிர்கொண்டது. சர்வதேச தரவரிசைப் பட்டியிலில் 5ஆவது இடத்தில் உள்ள சானியா - வெஸ்னினா ஜோடி, 6-2 என்ற புள்ளிக் கணக்கில் முதல் செட்டை வென்றது.

ஆனால் முதல் சுற்றில் காட்டிய வேகத்தை சானியா ஜோடி இரண்டாவது செட்டில் காட்டவில்லை. ஆனால் இத்தாலி ஜோடி மிகவும் ஆக்ரோஷமாக விளையாடி 6-0 என்ற கணக்கில் வென்றது. முன்றாவது சுற்றில் 7-10 என்ற கணக்கில் சானியா ஜோடி இழந்தது.

இதனால் 6-2,0-6,7-10 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து, முதல் சுற்றிலேயே போட்டியில் இருந்து வெளியேறினர்.

# 20 வயதிற்குட்பட்ட கால்பந்தாட்டம் 2 ஆவது சுற்றில் பிரேசில் வெற்றி



20 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண கால் பந்தாட்டப் தொடரில் இரண்டாம் சுற்றுப் போட்டியில் பிரேசில் அணி வெற்றிபெற்றுள்ளது. இதன்பிரகாரம் ஸ்பெய்ன் அணியை நாளை நடைபெறவுள்ள மூன்றாவது காலிறுதிப் போடடியில் பிரேசில் எதிர்த் தாடவுள்ளது.

இதேவேளை தொடரின் காலிறுதிச் சுற்றுகரு நைஜீரியா, பிரேசில் மறறும் ஸ்பெய்ன் ஆகிய நாடுகள் தகுதி பெற்றுள்ளன.

இரண்டாம் சுற்றுப் போட்டியில் சவுதி அரேபிய அணிய்ய 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிகொண்டதன் மூலம் காலிறுதிச் சுற்றை பிரேசில் உறுதி செய்து கொண்டது. மற்றுமொரு போட்டியில் இங்கிலாந்து அணியை எதிர்கொண்ட நைஜீரியா ஒன்றுக்கு பூஜ்ஜியம் என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதேவேளை தென் கொரிய அணியை எதிர்கொண்ட ஸ்பெய்ன் 7 இற்கு 6 என்ற தண்ட உதை முறையிலான கோல்கள் அடிப்படையில் வெற்றியீட்டிது. மெக்சிக்கோ, கொலம்பியா, போர்த்துக்கல், மற்றும் ஆர்ஜென்ரினா ஆகிய அணிகள் ஏற்கனவே காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி.யின் மூன்று விருதுகளுக்கு சங்கக்காரவின் பெயர் பரிந்துரை

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் சபையின் மூன்று விருதுகளுக்கு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபையின் விருதுகளுக்கான நீண்ட பெயர் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கையின் குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன, லசித் மலிங்க ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இவர்களுள் குமார் சங்கக்காரவின் பெயர் மூன்று விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வர்ர், சிறந்த ஒருநாள் வீரர், ஆண்டின் மக்கள் தேர்வு விருது ஆகிய மூன்று விருதுகளுக்கு சங்கக்கார போட்டியிடுகிறார்.

அத்துடன் ஆண்டின் சிறந்த ஒருநாள் வீரர் விருதுக்காக மஹேல ஜயவர்தன், லசித் மலிங்க ஆகியோரது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.


ஐ.சி.சி ஆண்டு விருதுக்கான வீரர்கள் கடந்த 2010 ஒகஸ்ட் 11ஆம் திகதி முதல் 2011 ஒகஸ்ட் 2ஆம் திகதி வரையான காலப்பிரிவில் கிரிக்கெட் அரங்கில் சோபித்தோருக்கு வழங்கப்படவுள்ளது. இந்த விருது விழா எதிர்வரும் செப்ரெம்பர் 12ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ளது.

இதில் 10 பிரிவுகளில் தனிப்பட்டோருக்கு விருது வழங்கப்படவுள்ளது. இதில் மக்கள் தேர்வு விருதும் அடங்கும் அத்துடன் சிறநத டெஸ்ட், ஒருநாள் மற்றும் கிரிக்கெட் உணர்வை வெளிக்காட்டிய அணிகளுக்கு விருது வழங்கப்படவுள்ளது. இதேவேளை நடுவருக்கான விருதில் நடுவர் குமார் தர்மசேனவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



சங்கக்கார

# சச்சினின் மோசமான ஆட்டம் காரணம் கண்டுபிடித்த கவாஸ்கர்



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரை புறக்கணித்ததுதான் சச்சினின் இப்போதைய திணறலுக்கு காரணம் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கவாஸ்கர் கூறியது:

உலகக் கோப்பை ஐ.பி.எல் தொடர் முடிந்தவுடன் சச்சின் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் இருந்து ஓய்வு வேண்டும் என கேட்டுப் பெற்றார். இங்கிலாந்துடனான ஆட்டத்தில் சொதப்பிக் கொண்டுள்ளார். ஒருவேளை அடுத்த மூன்று இனிங்சில் சச்சின் மூன்று சதங்கள் கூட அடிக்கலாம்.

ஆனால் என்னைப் பொறுத்தவரை சச்சின் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் பங்கேற்று இருக்க வேண்டும். இதில் பங்கேற்று விளையாடி இருந்தால் இப்படி திணறும் நிலை ஏற்பட்டு இருக்காது. தற்போதைய டெஸ்ட் போட்டியில் இவர் தற்காலிகமாகத் தான் அவுட்டானார்.

கடைசி இனிங்சில் அரை சதம் அடித்த நம்பிக்கையில் இருந்தார். இந்நிலையில் புரோட் வீசிய பந்து வெளியில் செல்லும் என்று தான் நினைத்திருப்பார். எதிர்பாராத விதமாக பந்து உள்ளே வந்துவிட்டது இதனால் ஆட்டமிழந்தார் எனத் தெரிவித்தார்.

# ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ் நடால் அதிர்ச்சித் தோல்வி

கனடாவில் உள்ள மாண்ட்ரீலில் நடைபெறும் ரோஜர்ஸ் கோப்பை ஆடவர் சர்வதேச ரென்னிஸ் ஒற்றையர் ஆட்டத்தில் உலகின் முன்னணி வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார்.

2 ஆவது சுற்று ஆட்டத்தில் அதிகம் அறியப்படாத குரேஷிய வீரர் இவான் டோடிக் என்ற வீரரிடம் 1- 6, 7- 6, 7- 6 என்ற செட் கணக்கில் நடால் தோல்வியைத் தழுவினார்.

சுமார் 3 மணி நேரம் 8 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டம். நடாலின் ஆட்டத்தில் களைப்பு வெளிப்பட்டது. மற்ற 2 ஆவது சுற்று ஆட்டங்களில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் 7- 5, 6- 1 என்ற செட்களில் டேவிடென்கோவை வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ரோஜர் பெடரர் கனடா வீரர் வாசக் போஸ்பீசில் என்பவரை 7- 5, 6- 3 என்ற செட்களில் வீழ்த்தினார். அவுஸ்திரேலிய வீரர் டோமிக்கை வீழ்த்திய பிரான்ஸ் வீரர் வில்பிரெட் சொங்காவை பெடரர் சந்திக்கிறார். தனது விம்பிள்டன் தோல்விக்காக சொங்காவை அவர் பழிதீர்க்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மற்ற ஆட்டங்களில் கயேல் மான்பீஸ், டொமாஸ் பெர்டிச் ஆகியோரும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

# செப்ரெம்பரில் ஆரம்பம்

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு சர்வதேச இருபதுக்கு -20 கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இங்கிலாந்தின் ஒவல் மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக அந்த நாட்டுக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன் முதலாவது போட்டி செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதியும், இரண்டாவது போட்டி 25ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடருக்கு முன்னர் மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் ஐந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் மற்றும் ஒரு இருபதுக்கு -20 போட்டிகளில் இங்கிலாந்து அணி விளையாடவுள்ளமை. குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்ரேலிய வீரருக்கான விஸாவை இந்திய அரசாங்கம் வழங்கியது


(மெல்பேர்ன்)



அவுஸ்ரேலிய வீரர் உஸ்மான் கவாஜா, இந்தியாவர விஸா வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக விசா பெற அவர் அளித்த விண்ணப்பம் முழுமையாக நிரப்பப்படாமல் இருந்ததும், போதுமான ஆவணங்கள் இண்ணக்கப்படாததும்தான் நிராகரிக்கப்பட்டதற்குக் காரணம் என்று மெல்போர்னில் உள்ள இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க இந்தியா வர வேண்டி கவாஜா விஸா கேட்டு விண்ணப்பித்திருந்தார். அவுஸ்ரேலிய அணியில் கிரிக்கெட் விளையாடினாலும், கவாஜா பாகிஸ்தானில் பிறந்தவர். இதன் காரணமாகத்தான் தனக்கு விஸா மறுக்கப்பட்டதாக அவர் இந்தியா மீது குறை கூறியிருந்தார். இது கிரிக்கெட் மற்றும் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சரத்பொன்சேகா - ரணில் சந்திப்பு



(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு சென்று நேற்றுமுன்தினம் மாலை முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை சந்தித்துள்ளனர்.

சரத் பொன்சேகாவுடனான சந்திப்பை அடுத்து கருத்து வெளியிட்ட திஸ்ஸ அத்தநாயக்க முன்னாள் இராணுத் தளபதியின் நலன் விசாரிப்பதற்காகவே சிறைச்சாலைக்கு சென்றதாகவும் அங்கு எவ்வித அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக பேசப்படவில்லை எனவும் கூறினார்.

அனோமா பொன்சேகா கொழும்பு மாநகர சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடுகின்றாரா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு ஐக்கிய தேசியக் கட்சி அத்தகைய தீர்மானத்தை எடுக்கவில்லை என குறிப்பிட்ட அவர் வேட்புமனு குழு எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு பின்னர் கூடி வேட்பாளர்கள் தொடர்பில் ஆராயும் எனவும் கூறினார்.

# அமெரிக்க விமானப்பறப்பு விடயத்தில் யார் கூறுவது உண்மையானது?

## கேள்வியெழுப்புகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

அமெரிக்க விமானங்கள் இலங்கையின் வான் பரப்புக்குள் அத்துமீறியதாக கூறப்படும் சம்பவத்தின் உண்மைத் தன்மை பற்றியும் இச்சம்பவம் தொடர்பில் பெறப்பட்ட முரண்பாடான அறிக்கைகள் பற்றியும் ஜே.வி.பி. அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளது.


"யார் பொய் கூறுகிறார்? யாரை நாம் நம்புவது?" இதுவே எமது கேள்வி என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கூறினார்.

அமெரிக்காவின் அழுத்தத்துக்கு பணிந்து ஊடுருவல் ஏதும் நடக்கவில்லை என்று கூறியதற்கு பதிலாக இந்த விடயத்தை அரசாங்கம் விசாரித்திருக்க வேண்டுமென அவர் கூறினார்.

ஊடுருவல் நடந்ததாக விமானப்படையின் பேச்சாளர் கூறியுள்ளார். அவர்தான் ராடர்களை கண்காணிப்பவர்கள் கூறுவதை நம்பாமல் அமைச்சர் சொல்வதை கேட்பது எவ்வாறு பொருந்தும்?

அமெரிக்க விமானத்தின் ஊடுறுவல் பற்றி உண்மை கூறிய விமானப்படை அதிகாரியை இடமாற்றம் செய்ய வேண்டாமெனவும் அவர் கூறினார்.

# இலங்கைக்கு எதிராக செயற்பட்ட நாடுகள் வீழ்ச்சி கண்டுவருகின்றன



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வந்த அனைத்து நாடுகளும் தற்போது வீழ்ச்சி கண்டு வருவதாக பொதுசன உறவுகள் மற்றும் பொதுசன விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் குறித்த நாடுகளின் நிலை குறித்து என்ன நடக்கிறது என்று உலகமே காணும் தேர்தலில் தோல்வியுற்ற மக்கள் விடுதலை முன்னணியின்ரே கிரீஸ் பூதமாக மாறி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மனித உரிமைகளுக்காக குரல்கொடுக்க அமெரிக்கா,பிரிட்டனுக்கு அருகதையில்லை

## மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க



(கொழும்பு)

**ஈராக்கில் 109,000 பொதுமக்களை கொன்றொழித்த அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் யுத்தக் குற்றம் தொடர்பாகவோ, மனித உரிமைகள் தொடர்பாகவோ குரல் கொடுக்க அருகதையில்லை என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரும், மின்சக்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

கொழும்பு சுதந்திர சதுக்கத்திலுள்ள தேசிய நூலக ஆவணவாக்கல் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினை காரணமாகவே அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் இராணுவத்தினருக்கு அதிகாரங்களை வழங்கி வீடுகளிலும், முக்கிய இடங்களிலும் சோதனைகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அன்று அவசரகாலச் சட்டம் அவசியமாக தேவைப்பட்டது. இன்று யுத்தம் முடிந்து விட்ட சூழ்நிலையில் இந்தியா சொல்வதால் அவர்களின் தேவைக்காக அவசரகாலச் சட்டத்தை நீக்க முடியாது. படிப்படியாக அவசரகால சட்டத்தை எமது தேவைக்கேற்ப நீக்கி சாதாரண சட்டத்தை அமுல்படுத்த முடியும்.

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர், நாகலாந்து மாநிலங்களில் அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளது. இதனை நீக்க வேண்டுமென நாம் இந்தியாவிடம் கூறவில்லை.

வடக்கின் தமிழ் சகோதரர்கள் என கண்ணீர் வடிக்கும் ஜெயலலிதா, மீனவர்கள் பிரச்சினையென வரும்போது தமிழ் மீனவர்கள் எனக் கூறுவதில்லை. இலங்கை மீனவர்கள் என்றே கூறுகின்றார். இதுதான் தமிழ்நாட்டுக்காரர்கள் வடபகுதி தமிழ் மக்கள் மீது வைத்திருக்கும் அன்பாகும். இது உண்மையானதல்ல. வெறும் வேஷம்.


ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கப் படையினரும் பிரிட்டிஷ் படையினரும் ஒரு இலட்சத்து 9000 பொதுமக்களை கொன்று குவித்தனர். இது தொடர்பில் ஈராக்கில் இருந்த அமெரிக்க படையதிகாரி உத்தியோகபூர்வமாக அறிக்கை கையளித்துள்ளார். த கார்டியன் பத்திரிகையில் இது பிரசுக்கப்பட்டுள்ளது. எனவே, அமெரிக்காவும் பிரிட்டனும் மக்களை கொலை செய்தது நிரூபணமாகியுள்ளது.

அத்தோடு இக் குற்றச்சாட்டை இரு நாடுகளும் நிராகரிக்கவில்லை. இவ்வாறு உத்தியோகபூர்வமாக குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு இவர்கள் எம்மை பதிலளிக்க வேண்டுமென கோர முடியாது. அதற்கான அருகதையும் கிடையாது.

ஈராக்கை ஆக்கிரமித்த இவர்கள் அந்நாட்டின் வரலாற்றுச் சின்னங்களை நகரங்களை அழித்தனர். போர் வழி முறைகளுக்கு அப்பாற் சென்று நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்றார்.

# தமிழகத்திலிருந்து அகதிகள் திரும்பினால் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்

## மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன்



(கொழும்பு)

தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகள் இலங்கை வருவதற்கு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களை வரவேற்று சகல வசதிகளையும் செய்துகொடுக்க அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது.

இதுவரை 14 குடும்பங்கள் தமிழகத்தில் இருந்து வந்துள்ளன. அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற நிலைமை மற்றும் தமிழக அகதிகள் விடயங்கள் குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில், தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகள் மீண்டும் இலங்கை வருவதற்கு விரும்பினால் அவர்களை வரவேற்று சகல வசதிகளையும் செய்து கொடுக்க மீள்குடியேற்ற அமைச்சு தயாராக இருக்கின்றது.

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதி மக்கள் தாம் எப்போதும் மீண்டும் இலங்கை வருவதற்கு உரிமையை கொண்டுள்ளார்கள். எனவே அவர்கள் இலங்கைக்கு வந்து சகலரும் சொந்த இடங்களில் அந்த மக்கள் குடியேற முடியும்.

மேலும் இதுவரை 14 குடும்பங்கள் தமிழக அகதி முகாம்களிலிருந்து இலங்கைக்கு வந்துவிட்டன. அவர்கள் சகல வசதிகளுடனும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா அகதி முகாம்களில் தற்போதைய நிலைமையில் 4000 குடும்பங்களே தங்கியுள்ளன. அவர்களை விரைவில் மீள்குடியேற்றி விடுவோம்.

இவ்வருடம் முடிவடைவதற்கு முன்னர் அந்த மக்களை மீள்குடியேற்றுவதே எமது நோக்கமாகவுள்ளது.

நிலக்கண்ணி வெடிகளே மீள்குடியேற்றத்துக்கு பாரிய தடையாக அமைந்துள்ளன. எனவே நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் மீள்குடியேற்றம் இடம்பெறும் என்றார்.

# வவுனியா நகரத்தில் அமைந்துள்ள ஆலைகளை அகற்றுமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா நகர எல்லைக்குள் அமைந்திருக்கும் அரிசி ஆலைகள், கல் உடைக்கும் ஆலை, சீமெந்து களஞ்சி யம் ஆகியவற்றை நகருக்கு வெளியே மாற்றவோ அல்லது தூசிகள் வெளியேறாமல் நவீன முறையில் இயங்கவைக்கவோ ஆவண செய்யுமாறு சமூக ஒற்றுமைக்கான மக்கள் பேரவை மாவட்ட அரச அதிபரை கேட்டுள்ளது.

பேரவை அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பல வருடங்களுக்கு முன்னர் மக்கள் பெருமளவில் குடியிருக்கவில்லை. காலப்போக்கில் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும் நகரை அண்டி மக்கள் வாழ்வை தேட முன் வந்ததன் காரணமாகவும் இன்று மக்கள் தொகை வெகுவாக அதிகரித்துவிட்டது.

இப்படியான நிலையிலும் ஆலைகள் நகருக்கு மிக அண்மையாக இருப்பதினால் இவைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், தூசி, சத்தம் ஆகியவைகளினால் தொற்று நோய்கள் சுவாச கோளாறுகள், மாணவர்கள் படிக்க முடியாமை,பாதைகள் விரைவாக பழுதடைதல்,மின்சார சீர்குலைவுகள், போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது.

சில இடங்களில் வீதியால் பயணிப்போர் அரிசி ஆலை தூசியினால் பல விதத்திலும் கஸ்டங்களை அனுபவிக்கின்றனர்.

குடியிருக்கும் மக்களை பாதிக்காத வண்ணம் மாற்றங்களை செய்யுமாறு வேண்டுகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

இதன் பிரதிகள் வவுனியா நகர சபை தலைவர், நீர்ப்பாசன பொறியியலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# மீள்குடியேறியுள்ள மக்கள் சொந்தக்காலில் நிற்க வேண்டும்

## வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ்



(வவுனியா)

மீள் குடியேறியுள்ள மக்கள் நன்கொடைகளுக்காகவும் நிவாரணப் பொருட்களுக்காகவும் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், பல்வேறு நிறுவனங்கள் என்பவற்றிற்கு முன்னால் கால் வலிக்க காத்திருக்கும் நிலைமை மாற வேண்டும் நீண்ட கால யுத்தத்தின் பின்னால் பல துன்பங்களுக்கு மத்தியில் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறியுள்ள மக்கள் தங்களது சொந்தக் காலில் நிற்கவேண்டும் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையில் கிராம மட்ட அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கான இரண்டு மாத பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

இந்த நாட்டின் எதிர்காலத்திலே மறுமலர்ச்சியிலே இளைஞர் சந்ததி தமது பங்களிப்பை செலுத்த வேண்டும். அதற்காக ஒரு மாற்றத்தினை கிராமத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதினாலேயே இப் பயிற்சி நெறியில் கிராமப்புற யுவதிகள், இளைஞர்களை இணைத்துக் கொண்டோம்.

முன்னைய காலங்களில் சொல்வார்கள் கனவு காண வேண்டாம் என்று ஆனால் நான் உங்களிடம் கேட்பது கனவு காணுங்கள் என்று அது எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்றால் உங்கள் எதிர்காலம் பற்றியதும் உங்களுடைய குடும்பத்தைப் பற்றியும் உங்களது கிராமம் மாவட்டம் பற்றியதாக இருக்க வேண்டும்.

ஏனென்றால் மார்ட்டிங் லூதர் கிங் அமெரிக்க நாட்டில் கறுப்பினத்தவர்கள் அடிமைகளாக வாழ்ந்த போது அவர் ஒரு கனவு கண்டார். வெள்ளை இனத்தவரோடு கறுப்பினத்தவரும் ஒரே பாடசாலையில் கற்க வேண்டும். ஒரே ஆலயத்திற்கு செல்ல வேண்டும். ஒரே புகையிரதத்தில் செல்லவேண்டுமென்று

இன்று அவரது கனவு நனவாகி ஒபாமா அந்நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றார் என்றார்.

இப்பயிற்சி நெறியில் வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் 35 பேர் கடந்த இரண்டு மாத காலம் பயிற்சி பெற்றுள்ளதுடன் 31 பேர் சிறந்த முறையில் சித்தி பெற்று சான்றிதழ் பெற்று வெளியேறினர்.

இந்நிகழ்வில் வவுனியா வளாகத்தின் முதல்வர் நந்தகுமாரன், வியாபார கற்கைப் பீடத்தின் தலைவர் மற்றும் விரிவுரையாளர்கள், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்டத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பல அமைப்பின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

### "நிழலில்லா தடயங்கள்" கவிதை நூல் வெளியீடு

(மன்னார்)

மன்னார் மயூரன் எழுதிய "நிழலில்லா தடையங்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்னார் சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெறும் மேற்படி நூல் வெளியீட்டு விழாவிற்கு முதன்மை விருந்தினராக மன்னார் நகர சபையின் தலைவர் ச.ஞானப்பிரகாசம் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

# பொலிஸ் நிலையம் மீது கற்கள் வீசித் தாக்குதல்

(சம்மாந்துறை)

கிறீஸ் மர்ம மனிதன் ஒருவனுக்கு அடைக்கலம் கொடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பொதுமக்கள் சிலர் சம்மாந்துறை பொலிஸ் நிலையம் மீது கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணிவரை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ரயர்களை எரித்து மக்கள் அமைதியின்மையை தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருந்திரலான மக்கள் பொலிஸ் நிலையத்தை சூழ்ந்திருந்ததாகவும் அவர்களை கலைப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

தற்போது சம்மாந்துறை பிரதேசத்தில் அமைதி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்

# தமிழகம் செல்லும் இலங்கையர்களை பொலிஸ் நிலையத்தில் பதியக் கோரிக்கை?

(கொழும்பு)

தமிழகத்திற்கு செல்லும் இலங்கையர்கள் காவல் நிலையத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிற்குள் பிரவேசிக்கும் போதே காவல்துறையினரிடம் தங்களது விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இலங்கை யாததிரிகர்கள் மீது அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்ட காரணத்தினால் இந்த மேலதிக பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விமான நிலையங்களிலேயே தங்களை பதிவு செய்து கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்தியாவிற்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் வடிவேல் கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் தங்களது பயண விபரங்களையும் தங்குமிட விபரங்களையும் காவல் துறையினருக்கு வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான தகவல்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு போதியளவு பாதுகாப்பை வழங்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# நெடுங்கேணியில் அழிவடைந்து போயுள்ள பாரிய அரிசி ஆலையை இயக்க நடவடிக்கை

(கொழும்பு)

கடந்தகால யுத்த நடவடிக்கை காரணமாக வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் அழிவடைந்த வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கத்திற்கு சொந்தமான மிகப்பெரிய அரிசி ஆலையை மீளவும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமையம் வவுனியா ப.நோ.கூ சங்கத்துடன் இணைந்து இந்த அரிசி ஆலையை மீளவும் இயக்குவதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

அவுஸ்ரேலிய அரசின் நிதியுதவியுடன், தொழில் அமைச்சு,சர்வதேச தொழில் ஸ்தாபனம் இணைந்து மூன்று வருட திட்டத்தில் இக்கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்படி அரிசி ஆலைக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் வகையில் 10.8 மில்லியன் ரூபாவிற்கான உடன்படிக்கையை சர்வதேச தொழில் ஸ்தாபனம் கைச்யெழுத்திட்டுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் இதன் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததும் வேலைகள் ஆரம்பமாகும். இங்கு ஒரு வருடத்தில் நான்காயிரம் மெற்றிக்தொன் நெல்லை அரிசியாக்கும் வேலைகள் நடைபெறும் இதன் மூலம் இருபது புதிய வேலைவாய்ப்புகள் கிடைப்பதுடன் இரண்டாயிரம் விவசாயிகளும் நன்மையடைவர்.

அனுராதபுரத்திலுள்ள அறுவடைக்குப் பின்னதான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திநிறுவனம் தொழில்நுட்ப உதவிகள் மற்றும் உபகரணங்களைப் பொருத்தும் நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்கவுள்ளது.

இந்த திட்டம் கடந்த கால போரால் பாதிக்கப்பட்ட வவுனியா,மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் பொருளாதார அபிவிருத்தியையும் அங்குள்ளவர்களுக்கான தொழில்வாய்ப்பையும் ஏற்படுத்தவுள்ளது.

வடமாகாணத்தில் அரசின் மீள்கட்டுமானத் திட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு மிகவும் முக்கியமானதாக உள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

# சிறுமிகள் மீதான துஷ்பிரயோகம் சந்தேகத்தில் நால்வர் கைது

(கொழும்பு)

சிறுமிகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

1929 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைய,இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றதாக, அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எம்பிலிபிட்டிய, இராஜகிரிய, மற்றும் கொடக்கவளை ஆகிய பகுதிகளிலேயே இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெற்றோர் சிறுவர்கள் மீது போதிய கவனம் செலுத்தாமையே அவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரிப்பதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# யாழிலிருந்து பெருமளவு பக்தர்கள் மடுமாதா பெருவிழாவுக்கு பயணம்

(மன்னார்)

மடு மாதாவின் வருடாந்த பெருவிழாவில் கலந்து கொள்வதற்கான இம்முறை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கின்றனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் மாதாவின் திருச்சொருப பவனியைக் கண்டு கழித்து ஆசிபெறுவதற்கு நாட்டின் பல பிரதேசங்களிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் மடுமாதா ஆலயத்திற்கு வருகை தந்த வண்ணமுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கேரதீவு,சங்குப்பிட்டி பாதை வழியாக விசேட பேருந்துக்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பக்தர்களின் வருகை அதிகரித்திருப்பதால் ஆலயத்திற்கு சகல அத்தியாவசிய சேவைகளும் தேதவையான ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)



யாழ்.வட்டுக்கோட்டை வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இதன்போது சபாநாயகரிடமிருந்து மாணவர்கள் கற்றல் உபகரணப்பொருட்களைப் பொற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் வாசுதேவவையும் காணலாம்.

# தமிழரின் வரலாற்றினை உரிய முறையில் அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டும்

## அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்

(மன்னார்)

ஈழத்தமிழரின் பண்டையகால புராதன வரலாறுகள் தெளிவற்றவையாகவும் சான்றாதாரங்கள் குறைவானதாகவும் இருப்பதற்குக் காரணம் தமிழர்களிடம் தமது வரலாற்றைப் பதிவுசெய்கின்ற வழக்கம் குறைவாக இருந்தமையே ஆகும். ஈழத்தமிழரின் இன்றைய வரலாறுகள் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்டு அடுத்த தலைமுறைக்கு கையளிக்கப்பட வேண்டும். இது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும் என மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநரும், மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான அருட திரு தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

மன்னார் கல்வி வலய தமிழ் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் பெப்பி விக்ரர் லெம்பேட் எழுதிய "வரலாற்றில் தடம்பதித்த வங்கக் கலைஞர்கள்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வங்காலையில் கடந்த வியாழக்கிழமை இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. அவர அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நேற்றைய பதிவுகள் இன்றைய வரலாறு. அதேபோல் இன்றைய பதிவுகள் நாளைய வரலாறு. இதன் அடிப்படையில் உலகத்தில் உள்ள மக்கள் குழுமங்கள் ஒவ்வொன்றும் தத்தமது தனித்துவ அடையாளங்களை, பாரம்பரியங்களை, வரலாறுகளை இனங்காண்பதிலும் பதிவுசெய்வதிலும் இன்று அதீத முனைப்புக் காட்டிவருகின்றன.

ஈழத்தமிழரின் பண்டைக்கால புராதன வரலாறுகள் தெளிவற்றவையாகவும் சான்றாதாரங்கள் குறைவானதாகவும் இருப்பதற்குக் காரணம் தமிழர்களிடம் தமது வரலாற்றைப் பதிவுசெய்கின்ற வழக்கம் குறைவாக இருந்தமையே ஆகும்.

இத்தகையதொரு பின்னணியில்தான் பெப்பி விக்ரர் லெமபேட்டின் "வரலாற்றில் தடம் பதித்த வங்கக் கலைஞர்கள்'' என்ற தலைப்பில் இந்த நூலாக்க முயற்சியின் முக்கியத்துவத்தை நாம் நோக்க வேண்டும்.

வங்காலை மண் கல்விக்கும் கலைக்கும் பெயர்போன மண்ணாகும். இந்த மண்ணில் இருந்து பல ஆற்றல் வாய்ந்த கலைஞர்கள் தோன்றி தமிழுக்கும் திருமறைக்கும் அரிய பணிகளைப் புரிந்துள்ளனர். இவர்களின் வரலாறுகள் பதிவுசெய்யப்பட்டு அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கப்பட வேண்டும். கால ஓட்டத்தில் இந்தக் கலைஞர்களின நினைவுகள் காணாமல்போய் விடாதிருக்க ஆசிரியர் பெப்பி விக்ரர் லெம்பேட் மேற்கொண்டுள்ள இந்த முயற்சி முக்கியமானதாகும். இது அனைவராலும் பாராட்டி ஊக்குவிக்கப்பட வேண்டியதாகும் என்றார்.

# பெண்ணைத் தாக்கிய மர்ம நபர் இராணுவத்திலிருந்து விலகியவராம்

(திருகோணமலை)

திருகோணமலை கந்தளாய் பகுதியில் பெண்களை தாக்கியதாகக் கூறப்படும் மர்ம மனிதர் இராணுவத்திலிருந்து இடைவிலகியவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இந்நபரை நேற்றுமுன்தினம் மாலை பிரதேச இளைஞர்கள் கந்தளாய் மத்திய மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேக நபரை பொலிஸார் விசாரித்த போது இந்நபர் இராணுவத்திலிருந்து இடைவிலகியவர் எனத் தெரிவித்துள்ளார்.

இவர் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் திருகோணமலை நிலாவெளிப் பிரதேச இராணுவ முகாமில் கடமையாற்றியவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை போக்குவரத்துச் சபையில் விரைவில் பெண் சாரதி, நடத்துநர்கள்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபை பெண் சாரதிகளையும் நடத்துனர்களையும் இணைத்துக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளது. கொட்டாவையில் இருந்து புறக்கோட்டைக்குச் செல்வதற்கான பெண்களுககு மட்டுமான இலங்கை பஸ் போக்குவரத்துச் சேவையை ஆரமபத்து வைத்த வேளையில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம இது தொடர்பில் தெரிவித்திருந்தார். இலங்கை முழுவதிலும் பெண்கள் மட்டும் பயணிக்கக் கூடிய பஸ் சேவைகளை பரவலாக்குவதற்கான நடவடிக்கைகளை தாம் தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு பெண்களுக்கான பஸ் போக்குவரத்துச் சேவையை வழங்குவதன் மூலம் பெண்களுக்கு எதிரான பல வன்முறைகள் குறைக்கப்படும் என்பது உத்தரவாதம் எனவும் அவர் தெரிவித்தார்.

மாத்தறை - கொழும்பு அதிவேகப் பாதையை திறந்ததன் பின்னர இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் ஆடம்பரமான பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ள அதேவேளை, அவ் பஸ் சேவைக்காக பெண் சாரதிகளும் பெண் நடத்துனர்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் அரைக்கப்படும் கோதுமையில் எண்பது வீதமான தவிடு இருக்க சட்ட ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் அரைக்கப்படும் கோதுமையில் 80 சதவீதம் தவிடு இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் சுகாதார அமைச்சு விசேட சட்ட ஏற்பாடு ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது. சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு பல மட்டக்கலந்துரையாடல்களை நடாத்திய பின்பே இவ்விடயம் தொடர்பாக சட்ட ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துமாறு அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அமைச்சின் அதிகாரியொருவர் கூறுகையில், வெளிநாட்டிலிருந்து கோதுமை இறக்குமதி செய்யப்பட்டுத்தான் இங்கு அரைக்கப்படுகின்றது. இச்சமயம் கோதுமை விதையில் 74 சதவீதம் தவிடு நீக்கப்படுகின்றது. இதனால் எஞ்சுவது மாப்பகுதி மாத்திரமே. இதனைக் கொண்டுதான் பாண் உள்ளிட்ட கோதுமை மாவிலான உணவுப் பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் விற்றமின் வகைகளோ நார்ப் பொருட்களோ கிடையாது. நீரிழிவு உள்ளிட்ட பல தொற்று நோய்களுக்கும் இந்தக் கோதுமைமா துணை புரிகின்றது.

கோதுமையின் தவிட்டில் தான் விட்டமின் வகைகளும் நார்ப் பொருட்களும் பெருமளவு காணப்படுகின்றன. ஆயினும் அந்த தவிடு கோதுமை விதை எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறதோ அதே நாட்டுக்கே திரும்பவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இலங்கையில் அரைக்கப்படு[illegible] கோதுமையில் தற்போது 26 சத[illegible] வீதமே தவிடு காணப்படுகின்றது. இதனை 80 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கென விசேட சட்ட ஏற்பாடொன்றை அறிமுகப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது என்றார்.

# துணுக்காய் வலயப் பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

(அம்பலபெருமாள்)

துணுக்காய் வலயமட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட வலய மட்ட ஆங்கில தினப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு-

**கட்டுரை வரைதல்**

**தரம் - 06**

பி.பார்த்தீபன் - முல்.யோகபுரம் ம.வி, வி.நிலாஜினி - முல்.மல்லாவி சி.சி, கே.கிஸாபிகன் - முல்.ஒட்டுசுட்டான் ம.வி.

**தரம் - 07**

ரி.டினோயா - முல்.ஒட்டுசுட்டான் ம.வி, ஜெ.மிர்னாளினி - முல்.பாண்டியன்குளம் ம.வி, வை.நிரோஜா - முல்பாண்டியன்குளம் த.ம.வி.

**தரம் - 08**

என்.லினுஷா - முல்.யோகபுரம் ம.வி, வி.சாரங்கன் - முல்.யோகபுரம் ம.வி, எஸ்.பிரியங்கா - முல்.ஒட்டுசுட்டான் ம.வி.

**தரம் - 09**

யூ.சபிதா - முல்.யோகபுரம் ம.வி, வை.கஜனுஜா - முல்.யோகபுரம் ம.வி, ஏ.தர்ஷா - முல்.ஒட்டுசுட்டான் ம.வி.

**தரம் - 10**

என்.அச்சுதன் - முல்.யோகபுரம் ம.வி, எம்.நிரோஜன் - முல்.பாலிநகர் ம.வி, பி.மிதுஷன் - முல்.மல்லாவி சி.சி.

**தரம் - 11**

பி.தயாளினி - முல்.மல்லாவி சி.சி, ஏ.கார்த்திகா - முல்.யோகபுரம் ம.வி, எஸ்.நிலுஷா - முல்.மல்லாவி சி.சி.

**தரம் - 12**

வி.தேனுஜா - முல்.மல்லாவி சி.சி, எம்.அகத்தியா - முல்.மல்லாவி சி.சி, ஏ.சங்கீதா - முல்.ஒட்டுசுட்டான ம.வி.

**தரம் - 13**

கே.கௌரி - முல்.மல்லாவி சி.சி, பி.விதுர்ஷா - முல்.மல்லாவி சி.சி, எஸ்.சியாமினி - முல்.பாலிநகர் ம.வி.

**உறுப்தெழுத்து**

**தரம் - 03**

எஸ்.குமரன் -, முல்.மயில்வாகனம் ரி.வி, ஆர்.அபிசாந்தனன் - முல்.பாலிநகர் ம.வி, பி.சதீஸ்குமார் - முல்.ஆறுமுகம் வித்தி.

**தரம் - 04**

ஆர்.பிறைநிலா - முல்.அனிஞ்சியன் குளம் த.ம.வி, பி.சதனுகா - முல்.மயில் வாகனம் ம.வி, எஸ்.கோபிகா - முல். யோகபுரம் ம.வி.

**தரம் - 05**

என்.குகவதனி - முல்.பாலிநகர் ம.வி, எஸ்.சங்கவி-முல்.அனிஞ்சியன்குளம் த.ம.வி, ஜி.சரண்யா - முல்.ஆறுமுகம் வித்தி.

**தரம் - 06**

கே.அனித்தா - முல்.அனிஞ்சியன் குளம் த.ம.வி, ஜே.கிருஷிகா - முல். அனிஞ்சியன்குளம் - த.ம.வி, எஸ். ஜெனோதா - முல்.மல்லாவி சி.சி.

**தரம் - 07**

என்.டிலக்ஷிகா - முல்.மல்லாவி சி.சி, எஸ்.கஜானா - அனிஞ்சியன்குளம் த.ம.வி, பி.தரணி - முல்.பாலிநகர் ம.வி.

**தரம் - 08**

எஸ்.நிவேதிகா - முல்.கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ், ஏ.ரவினா - அனிஞ்சியன் குளம் த.ம.வி, எஸ்.கோபிகா - முல்.பாலி நகர் ம.வி.

**தரம் - 09**

கே.குவேனியா - முல்.யோகபுரம் ம.வி, எஸ்.பிரியதர்சினி - முல்.மல்லாவி சி.சி, என்.கௌர்மிகா - முல்.பாலிநகர் ம.வி.

**தரம் - 10**

கீர்த்திகா - முல்.மல்லாவி சி.சி, எஸ். கிஷாந்தன் முல். ஒட்டுசுட்டான் ம.வி, வி.மகித்தனா - முல. கற்சிலைமடு ஜி.ரி. எம்.எஸ்.

**தரம் - 11**

ஜெயசங்கரி - முல்.மல்லாவி சி.சி, பி.நர்மதா - முல்.மாங்குளம் ம.வி, கே.உமைராணி - முல்.பாலிநகர் ம.வி.

**தரம் - 12**

ரி.அஜந்தன் - முல்.மல்லாவி சி.சி, ஆர்.நிரோஜனா - முல்.மல்லாவி சி.சி, பி.ரொன்சன் - முல்.யோகபுரம் ம.வி.

**தரம் - 13**

எஸ்.கிருஷாந்தன் - முல்.மல்லாவி சி.சி, எல்.இந்துசா - முல்.மல்லாவி சி.சி, கே.புவிந்தினி - முல்.பாண்டியன்குளம் ம.வி.

**சொல்வதெழுதல்**

**தரம் - 06**

எம்.சுலக்சனா - முல்.அனிஞ்சியன் குளம் த.ம.வி, ஆர்.லக்ஷனா - முல். பாண்டியன்குளம் ம.வி, ஆர்.பிரியங்கா - முல்.யோகபுரம் ம.வி.

**தரம் - 07**

கே.றூபினி - முல்.கோட்டைகட்டிய குளம் ஜி.ரி.எம்.எஸ், ஜே.மிர்னாலினி - பாண்டியன்குளம் ம.வி, வை.சஜீவன் - கோட்டைகட்டிய குளம் ஜி.ரி.எம்.எஸ்.

**தரம் - 08**

ஏ.விதுர்ஷாயினி - முல்.யோகபுரம் ம.வி, என்.லினுஷா - முல்.யோகபுரம் ம.வி, எஸ்.பிரியங்கா - முல்.ஒட்டுசுட்டான் ம.வி.

**தரம் - 09**

ஏ.குந்தவி - முல்.மல்லாவி சி.சி, கே.ஆரணி - முல்.பாலிநகர் ம.வி, எஸ்.பிரகாஷ் - மல்லாவி சி.சி.

**தரம் - 10**

என்.அச்சுதன் - முல்.யோகபுரம் ம.வி, கீர்த்திகா - மல்லாவி. சி.சி, அனோசன் - முல்.மல்லாவி சி.சி.

**தரம் - 11**

ஏ.கார்த்திகா - யோகபுரம் ம.வி, பி.தயாளினி - முல்.மல்லாவி சி.சி.

**தரம் - 12**

வி.தேனுஜா - முல்.மல்லாவி சி.சி, ரி.அஜந்தன் - முல்.மல்லாவி சி.சி, ஆர். லோகேஸ்வரன் - முல்.பாண்டியன்குளம் ம.வி.

**தரம் - 13**

கே.பிருந்தா - முல்.பாலிநகர் ம.வி, ஜே.தட்சாயினி - முல்.மல்லாவி சி.சி, ஏ.கீர்த்திகா - முல்.மல்லாவி சி.சி.

**பேச்சு - தரம் - 03**

பி.தனோஜன் - முல்.யோகபுரம் ம.வி, பி.சுமதினி - கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ், பி.கேதுஜா - முல்.பாலிநகர் ம.வி, கே.சன்சிகா - முல்.கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ்.

**தரம் - 04**

ஐ.நர்மதா - முல்.பாலிநகர் ம.வி, ஆர்.தர்சிகா - முல். மயில்வாகனம் ரி.வி, எஸ்.கோபிகா - முல்.யோகபுரம் ம.வி.

**தரம் - 05**

ஏ.சண்முகப்பிரியா - முல்.அனிஞ்சியன்குளம் த.ம.வி, எஸ்.பேபிகா - முல். மயில்வாகனம் ரி.வி, என்.குகவதனி - முல்.பாலிநகர் ம.வி.

**தரம் - 06**

பி.ரேக்கா - முல்.பாலிநகர் ம.வி, ஆர்.பிறைவாணி - முல்.அனிஞ்சியன்குளம் த.ம.வி, ஏ.அருட்சாயினி - முல்.பாலி நகர் ம.வி.

**தரம் - 07**

ஜே.கேதாரணி - முல்.பாலிநகர் ம.வி, வை.கர்ணுஜா - முல்.அனிஞ்சியன்குளம் ரி.எம்.வி, என்.சுஜந்தினி - முல்.ஒலுமடு ரி.எம்.வி. என்.டிலக்சிகா - முல்.மல்லாவி சி.சி.

**தரம் - 08**

பி.பிரசாந்தினி - முல்.பாலிநகர் ம.வி, பானுசிறி - முல்.மல்லாவி சி.சி, எஸ்.யூடிற்றா - முல்.பாலிநகர் ம.வி.

**தரம் - 09**

பி.ஜனனி - முல்.மல்லாவி சி.சி, எஸ். அதுசனா - முல்.கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ, ஏ.குந்தவி - முல்.மல்லாவி சி.சி.


(121) (தொடரும்...)

## தனிமையில் வாடுபவர்களுக்கு



தனிமையில் வாடுபவர்களுக்காகவே இந்த கை இணைக்கப்பட்ட iPhone உறை தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது யப்பானின் டோக்கியோவில் மட்டும் விற்பனைக்கு வந்துள்ளது இந்த கை இணைக்கப்பட்ட போன் உறை. ஐபோன் 4 இல் பயன்படுத்தத்தக்க வகையில் இது ஆக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இது நிஜக் கைகளின் அளவிலேயே ஆக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொட்டு உணரும் போது ஓர் நிஜக் கையை ஸ்பர்சிக்கும் உணர்வே ஏற்படுகிறது.

ஆண், பெண், குழந்தையின் கை வடிவங்களில் வெளி வந்துள்ள இது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதனைப்பயன்படுத்துவோர் இந்த உறையில் இணைக்கப்பட்ட கையுடன் கைகோர்த்து பிடித்தமானவர்களுடன் பேசுகையில் அவர்களின் அருகில் இருப்பது போல தாம் உணர்வதாக தெரிவித்தனர். இதன் தயாரிப்பாளர் தனிமையில் வாடுபவர்கள் தாம் பிரிந்திருக்கும் உறவுகளுடன் இந்த உறை இணைக்கப்பட்ட போனில் பேசும் போது தனிமை





மறந்து உல்லாசமாக இருப்பதற்காகவே இந்தத் தயாரிப்பு தயாரிக்கப்படுவதாக தெரிவித்தார். இதன் சந்தைப்பெறுமதி 65 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## பலூன்களால் திருமண ஆடை



இங்கிலாந்து இளவரசி கேத்தின் திருமண உடை போல பலூனால் உடை செய்து அசத்தியிருக்கிறார் இங்கிலாந்து பெண் ஒருவர். ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த இங்கிலாந்து இளவரசர் வில்லியம் கேத் திருமணம் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி வெகு விமரிசையாக நடந்தது. மணப்பெண் கேத்தின் திருமண உடைக்கு மயங்காதவர்கள் இல்லை. சுமார் ரூ.2 கோடி மதிப்பிலான அந்த ஆடையை நேரிலும் தொலைக்காட்சியிலும் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அதில் ஒருவர் லெவிட் (54). இங்கிலாந்தின் லீசஸ்டர்ஷயர் ஹின்க்ளே பகுதியில் கணவர், 2 மகள்களுடன் வசிக்கிறார்.


பலூன்களை வைத்து பல்வேறு கலைப் படைப்புகள் உருவாக்குவதில் லெவிட் கில்லாடி. கேத் ஆடையையும் பலூனாலேயே வடிவமைக்க முடிவு செய்தார். சுமார் 5 ஆயிரம் பலூன்களை பயன்படுத்தி ஆடையை உருவாக்கி சாதனை படைத்துள்ளார். இதுபற்றி லெவிட் கூறுகையில், வெண்ணிற ஆடை என்பதால் வெள்ளை பலூன்கள்தான் அதிகம். ஆடையின் மேல் பகுதிக்காக கலர் பலூன்கள் வாங்கினேன். 5 ஆயிரம் பலூன்களையும் சைஸ் வாரியாக ஊதி முறுக்குவதற்கே 4 நாட்கள் ஆனது. அவற்றை இணைத்து ஆடையை உருவாக்கியுள்ளேன் என்றார். ஏற்கனவே ஒரு கார் முழுவதையும் பலூனால் அலங்கரித்து தோழியுடன் ஓட்டிச் சென்று அசத்தியுள்ளார் லெவிட்.

## கண்டுபிடிப்பு

2 ஆம் உலகப்போரின் போது சேதமடைந்த கப்பலொன்று பிரித்தானியாவினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. U-Boat எனப்படும் இந்தக்கப்பல் போரின்போது பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டதாகவும், விமானம் மூலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.


இந்தக்கப்பலை முழுமையாக வெளியில் எடுத்து நூதனசாலையில் வைக்கும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.






## அதிசய தேங்காய்

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் சென்னை மாநகரத்தில் உள்ள வல்லிவாக்கம் ஐயபபன் ஆலயத் தில் அற்புதம் ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. கோவிலில் கடந்த சனிக்கிழமை



தேங்காய் ஒன்று இரண்டாக வெட்டப்பட்டது. தேங்காயின் உட்புறம் வழக்கத்திற்கு மாறான தோற்றத்தைக் கொண்டிருந்தது.

## விண்வெளிக்கும் பியர்



விண்வெளியில் குடிப்பதற்கான பீயர் உருவாக்கப்பட்டுள்ளது. இதை அவுஸ்ரேலிய நிறுவனம் தயாரித்துள்ளது. விண்வெளிக்கு பயணிகளை சுற்றுலா அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அமெரிக்காவின் வர்ஜின் நிறுவனம் "வர்ஜின் கேலக்டிக்" என்ற பெயரில் விண்வெளி சுற்றுலாவை அடுத்த ஆண்டு தொடங்க உள்ளது. விண்வெளியில் 2016 ஆம ஆண்டுக்குள் ஹோட்டல் அமைப்பதாகவும் சில நிறுவனங்கள் கூறியுள்ளன. இந்நிலையில், விண்வெளியில் குடிப்பதற்கான பீரை ஆஸ்திரேலியாவின் 4 பைன்ஸ் ப்ஷரூயிங் கம்பெனியும் அமெரிக்காவின் சாபர் அஸ்ட்ரானமிக்ஸ் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன.

"ஸ்பேஸ் பீயர்" பற்றி இந்நிறுவன ஆராய்ச் சியாளர்கள் ஜரோன் மிசெல், ஜேசன் ஹெல்ட் கூறியதாவது:- விண்வெளியில் புவிஈர்ப்பு விசை கிடையாது. அதனால் வாயு மட்டுமின்றி, திரவ பொருட்களும் மிதக்கும். வயிற்றுக்குள் போன பிறகு, வாயுவுடன் சேர்ந்து திரவமும் மேலே எழுந்து வாந்தியாக வெளியேறிவிடும். எனவே, கேஸ் அளவை மிகமிக குறைத்து பீயர் தயாரிக்கப்பட்டுள்ளது. விண்வெளியில் நாக்கின் சுவை அரும்புகள் சற்று வீங்குவதால் அவ்வளவாக ருசி தெரியாது. எனவே, நாக்குக்கு ருசி தெரியும் வகையில் மிகமிக ஸ்ராங்காக இந்த பீயர் தயாரித்துள்ளோம். குயீன்ஸ் லேண்ட் பல்கலைக்கழகத்தின் புவிஈர்ப்பு இல்ல மையத்தில் இதற்கான சோதனையும் நடந்து முடிந்துவிட்டது. புவிஈர்ப்பு விசை இல்லாத இடத்தில் ஜெட் விமானத்தை குட்டிக்கரணங்கள் போட வைத்து அதில் ஒருவருக்கு இந்த பீயர் கொடுத்தும் சோதனை நடத்தப்பட்டுள்ளது. சோதனை வெற்றிகரமாக முடிந்துள்ளது.

## கூகிள் மப்

சுவிற்சர்லாந்தின் 8877 Quarten என்ற இடத்தை கூகிள் மப்பில் ஒரு அதிசய காட்சியை காணலாம். 8877 Quarten, Switzerland என்ற முகவரியை கூகிள் மப்பில் தேடிய பின்னர் வானத்தை பார்க்கக் கூடியவாறு ஸ்கோரல் செய்யுங்கள். அங்கே ஒரு உருவம் தோன்றும், இது கூகிள் படம்பிடித்த கமெரா லென்ஸை சரியாக சுத்தம் செய்யாததால் வந்திருக்கலாம் என்கிறார்கள். இதைப்பார்ப்பதற்கு இரு மனித உருவங்கள் இணைந்து நிற்பதைப்போன்று காணப்படுகிறது.

## 2012 இல் என்ன நடக்கும்




2012 ஆம் ஆண்டு அறிவியல் ரீதியாக உலகில் என்ன நடக்கும் என்பதை தெரிந்து கொள்ளும் ஆர்வம் நம்மில் அனைவருக்கும் இருக்கும். பல இடங்களில் குறிப்பாக மாயன் காலண்டர் கணிப்புப்படி 2012 டிசம்பர் 12 இல் உலகத்திற்கு பாதிப்பு வரலாம் என்ற செய்தியும் வெகு வேகமாக மக்களிடையை பரவிவருகிறது. இதைப்பற்றிய அறிவியல் ரீதியான விளக்கத்தை அளிப்பதற்காக ஒரு தளம் உள்ளது.

மாயன் காலண்டரைப் பொறுத்தவரை அதில் கூறியுள்ள அனைத்தும் நடந்து இருக்கிறது, 2012 இல் உலகம் அழியும் எனபது மாயன் காலண்டரில் உள்ள தகவல் என்று பல பேர் கூறிவருகின்றனர். அதற்கு பின் மாயன் காலண்டரில் எந்த தகவலும் இல்லை. அறிவியல் ரீதியாகவும் பூமிக்கு ஆபதது இருக்கிறது என்று பல பேர் கூறிக்கொண்டிருக்கும் நிலையில் உண்மையான தகவல்களை அறிவியல் ரீதியாக சொல்ல ஒரு தளம் உள்ளது. 2012 ஐ மக்கள், விஞ்ஞானிகள் எப்படி எல்லாம் கணித்திருக்கின்றனர் எனபதை ஒவ்வொருவரும் தங்களுக்கு தெரியவரும் அல்லது தெரிந்த தகவல்களை இத்தளத்தில் பகிர்ந்து கொள்ளலாம்.

பூமியின் வயது என்ன என்பதில் தொடங்கி மாயன் காலண்டர் வரை அனைத்தையும் விரிவாகவும் அறிவியல் ரீதியாகவும் விளக்குகிறது. மாயன் காலண்டர் கூறியுள்ளது எல்லாம் சித்திரம் மற்றும் சில விநோத கூறியீடுகள்.

சில சமயங்களில் அதிகாரப்பூர்வமாக மாயன் கலண்டரில் இப்படி தான இருக்கிறது என்று யாரும் துல்லியமாக கூறியதிலலை. ஆனால் ஒரு நிகழ்ச்சி நடந்தவுடன் அதை மாயன் காலண்டருடன் ஒப்பிடு செய்து ஏற்கனவே இது மாயனில் சொல்லி இருக்கிறது என்பதை தெரிவிக்கின்றனர். சில நிகழ்ச்சிகள் மாயன் கலண்டரில் உள்ளதை பார்க்கும் போது உண்மையான நிகழ்ச்சி தான் என்பதை மறுக்க முடியாத அளவிற்கு ஆதாரமுள்ளது.

இதைத்தவிர வானவியல் சம்பந்தமான பிரச்சினைகள் 2012 இல் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை தெளிவாக அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது. கண்டிப்பாக 2012 இல் என்னவெல்லாம் நடக்கலாம் என்று கணிப்பவர்களுக்கு இந்தத்தளம் பதிலாக இருக்கும்.

இணையதள முகவரி:- http://www.2012predictions.net/

**கணினி முலை**

## இந்தியச் செய்திகள்

# கலைஞர் தொலைக்காட்சியுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லை

## கனிமொழி மறுப்பு

-புதுடில்லி)

கலைஞர் தொலைக்காட்சியுடன் தமக்கு எந்தவிதமான தொடரபும் இல்லை என்று தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி கூறியுள்ளார். வழக்குரைஞர்கள் வேலை நிறுத்தம் காரணமாக சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த வாதம் நடை பெறவில்லை.

இதனால் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிபதியுடன் அதிகாரப்பூர்வமற்ற முறையில் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது மத்திய தொலைத் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, கனிமொழி, கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் சரத்குமார் உள்ளிட்டோர் தங்கள் தரப்பு பற்றி நீதிபதியிடம் பேசினர்.

நீதிபதியிடம் பேசும்போது இந்தக் குற்றச்சாட்டை கனிமொழி மறுத்தார் கலைஞர் தொலைக காட்சிக்கும் எனக்கும் ஒரு போதும் தொடர்பு இல்லை. அந்த நிறுவனம் எப்படி இயங்குகிறது, அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று அவர் கூறினார். சி.பி.ஐ.யின் மூன்றாவது குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் இன்னும் தாக்கல் செய்யப்படாதது பற்றி நீதிபதியிடம் சரத்குமார் குறை கூறினார். 'என்னைப் போன்ற பலர் கைது செய்யப்பட்டுப் பல மாதங்களாக சிறையில் வாடும் நிலையில், இந்த வழக்கில் தொடர்புடைய பலர் மீது இன்னும் குற்றப்பத்திரிகையே தாக்கல் செய்யப்படவில்லை' என்று அவர் கூறினார். கலைஞர் தொலைக்காட்சியின் பங்குதாரர்களான கனிமொழி, சரத்குமார் ஆகியோர் கடந்த மே 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டனர். இருவரது பிணை மனுக்களும், அவை தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.




# கோத்தபாய மீது நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறார் வீரமணி

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட ஈழத் தமிழர் பிரச்சினை குறித்த தீர்மானத்தை இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய விமர்சனம் செய்தது குறிதது மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் வீரமணி கேட்டுக்கொண்டுள்ளார்.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட முக்கிய அரசியல் தீர்மானம் குறித்து வெளிநாட்டவர் இவ்வாறு முதல்வரையும், அதன்மூலம் தமிழக சட்டப் பேரவையையும் கொச்சைப் படுத்திப் பேசியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.



இதுபோன்றவர்களை சட்டமன்றத்துக்குள் கொண்டுவந்து விசாரணை நடத்தி தண்டனை வழங்க முடியும் என வீரமணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்

# ராஜீவ் கொலை வழக்கு கைதிகளின் மரண தண்டனையை இரத்துச் செய்க

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் எனறு பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட மூவரும் தங்களது வாழ்க்கை எந்த நொடியில் முடிவுக்கு வருமோ என்ற கவலையுடன் 20 ஆண்டுகளை சிறையில் கழித்துள்ளனர். இது மிகவும் கொடுமையானது. எனவே மூவரின் கருணை மனுக்களை தள்ளுபடி செய்யும் முடிவை மறுஆய்வு செய்து அவர்களின் விடுதலைக்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

# மின்விநியோகத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது

(சென்னை)

தமிழகம் வழியாக இலங்கைக்கு, கடல் மார்க்கமாக மின் விநியோகம் மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழக ஆட்சிமாற்றத்தை அடுத்து இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஆந்திராவழியாக இந்தப் பணி இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. மத்திய அரசின் பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனம், பாக்கு நீரிணை கடற்பகுதியில், மின் விநியோகத்திற்காக மண் ஆய்வுப் பணியை 2010 இல், மண்டபம் பகுதியில் ஆரம்பித்தது.

ஆய்வு முடிந்த பின், திட்ட மதிப்பீடு ஒதுக்கப்பட்ட உடன், இந்தியாவிலிருந்து தமிழகம் வழியாக, இலங்கைக்கு மின்சார வினியோகம் மேற்கொள்ளப்பட இருந்தது. இதை ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோ உள்ளிட்டோர் எதிர்த்தனர். இருப்பினும், ஆற்றங்கரை ஊராட்சி பகுதியில் ஆரம்பமாகி இலங்கை தலைமன்னார் வரை கடலில் மண் ஆய்வுப் பணி தொடர்ந்து நடந்தது. தமிழக சட்டசபை தேர்தலுக்குப்பின், ஆட்சி மாறியதால், தற்போது இலங்கைக்கு, மின் விநியோகிக்கும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. மண் ஆய்வுப்பணியில் ஈடுபட்ட ஊழியர்கள், ஆந்திரா மாநிலம் நெல்லூருக்கு செல்லவுள்ளனர்.

# ஒரு மாற்று அரசியல்....

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இவர்களைப் பொறுத்தவரையில், சிந்திக்கும் திறனற்ற ஒரு மக்கள் திரளை அரசியல் இலாபங்களுக்காக உருவாக்குவதே நோக்கமாக இருக்கிறது. இதுதான் கடந்த காலங்களிலும் நடந்தது.

மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டால், அவர்களுக்கு உண்மை நிலை என்னவென்று தெரியும். யதார்த்தங்கள் புரிந்து விடும் என்று இவர்கள் பயப்படுகிறார்கள். ஆகவே மக்களை ஒரு வகையான பொய் மயக்கத்தில், போதையில் வைத்திருக்க இவர்கள் முயற்சிக்கின்றனர்.

அப்படி மக்களுக்கு எல்லாமே தெரிந்து விட்டால், தங்களுடைய இரட்டை வேடங்களையும் பொய்களையும் ஏமாற்றுக்களையும் மக்கள் கண்டுகொள்வார்கள். பின்னர் தங்களுடைய அரசியல் இருப்பே ஆட்டம் கண்டு விடும் என்று இவர்கள் அச்சமடைகின்றனர்.

எனவேதான் மக்களை இருட்டுக்குள் வைத்திருக்க இவர்கள் விரும்புகிறார்கள். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது அறிவின் யுகம். அறிவே இன்று எல்லாத் தளங்களிலும் ஆட்சி செலுத்துகிறது. மக்கள் சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும். அரசியல் தரப்புகள் தொடக்கம் ஊடகங்கள் வரையில் இந்த அறிவை விளங்கிச் செயற்படும் ஒரு மக்கள் திரளை உருவாக்குவதற்காக உழைக்க வேண்டும். உண்மைகளை மக்கள் அறிநது கொள்வதற்கு வழியை ஏற்படுத்த வேண்டும்.

ஆனால், அப்படி இலங்கையில் நடக்கிறதா?

கடந்த காலத்தில் மிக மோசமான ஒரு போரை இந்த நாடு சந்தித்திருக்கிறது. இந்த நாடே தாங்கிக் கொள்ள முடியாத அழிவுகளும் அவலங்களும் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன.

நடந்த போரினால், இலங்கைத்தீவின் அனைத்துச் சமூகங்களும் பாதிப்புகளைச் சந்தித்திருக்கின்றன. அதிலும் வடக்குக் கிழக்கில் உள்ள மக்கள் மிகக் கொடுமையான அழிவுகளையும் இழப்புகளையும் சந்தித்திருக்கின்றனர்.

அந்தப் போரின் காயங்களில் இருந்தும் அவலங்களில் இருந்தும் இன்னும் மீள முடியாத நிலையில் அந்த மக்கள் வாழ்கின்றனர். அவர்களை அந்த அவல வாழ்விலிருந்து மீட்டு, மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டு வரவேண்டிய அவசியப் பணி அனைவருக்கும் உரியதாக இருக்கிறது.

அந்தப் பணிகளைச் செய்வதை விடுதது, அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதிலும், மக்களுடைய கவனங்களைத் திசை திருப்பும் வகையிலும் செயற்படுகிறார்கள்.

எல்லாவற்றையும் எதிர்பதன் மூலமாகக் காலத்தைக் கடத்துவோர் மீண்டும் இலங்கைத் தீவில் அழிவுகளையே ஏற்படுத்த முனைகின்றனர்.

அரசாங்கம் அரசியல் தீர்வுக்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அதேவேளை பாதிக்கப்பட்ட பிரதேசங்களை முதன்மைப்படுத்தி அபிவிருத்திப் பணிகளைச் செய்துவருகிறது.

மக்களுக்கு அங்கே நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த நாட்டிலே உள்ள ஏனைய மக்களை விடவும் வடக்குக் கிழக்குப் பகுதி மக்களின் பிரச்சினைகள் அதிகமானவையாக இருக்கின்றன. அதிலும் போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரச்சினைகள் இன்னும் வித்தியாசமானவையாகும்.

ஆகவே அங்குள்ள மக்களின் நலன்களுக்கும் முன்னேற்றத்துக்குமான மறுவாழ்வுப் பணிகளை அரசுடன் இணைந்து நாம் செய்து வருகின்றோம். ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட செயற்றிட்டம் அங்கே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதை மறுத்துக் கொண்டும் மறைக்கும் விதமாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் எதுவுமே நடக்கவில்லை என்று கூறுவது எவ்வளவு மோசமான செயலாகும். மக்களுடைய தேவைகளை நிறைவேற்றும் முக்கிய பணியைக் கொச்சைப்படுத்தி, மக்களுடைய அவல நிலையைக் கொச்சைப்படுத்திச் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே பேசியிருந்தனர்.

மக்களுக்கும் இவர்களுக்கும் எவ்வளவு தூரம் இடைவெளி இருக்கிறது என்பதை இவர்களுடைய இந்த மனநிலை தெளிவாகவே காட்டுகிறது.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருக்கலாம். அந்தக் குறைபாடுகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

குறைபாடுகளைத் தெரிவிக்கக்கூடிய ஒரு சூழல் அங்கே உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் துணிச்சலுடன் தங்களின் பிரச்சினைகளைப் பேசுகிறார்கள். மக்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் உடனடியாகவே எடுக்கப்படுகின்றன.

இது பல மாற்றங்களை அடையாளப்படுத்துகிறது. இந்த மாற்றங்கள் எல்லாம் வெகு விரைவில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தும். குறிப்பாக வடக்குக் கிழக்கில் சிவில் நிர்வாகக் கட்டமைப்பு பலமாகி வருகிறது. இதையே நாம் எதிர்பார்க்கின்றோம். இதையே நாங்கள் விரும்புகிறோம்.

மக்களின் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் அவர்களுடைய சிறப்பான எதிர்காலமுமே இந்த நாட்டை வளர்ச்சியடைய வைக்கும். இந்த நிலையில், மனச்சாட்சியும் மனித நேயமும் உள்ள எவரும் இந்தத் துயரப்படும் மக்களுக்கெதிராகச் சிந்திக்கவே மாட்டார்கள் என நம்புகிறேன்.

இங்கே நான் யாரையும் குற்றம் சாட்ட முற்படவில்லை. நிலைமைகள் சீராக வேண்டும். மக்களுக்கான நன்மைகள் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்திலேயே இந்த அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளேன்.

உண்மையில் நாட்டில் ஏற்பட்டு வரும் அமைதிச் சூழலைப் பல சக்திகள் விரும்பவில்லை. இதை அண்மைக்கால நிலவரங்கள் தெளிவாகவே எடுத்துக் காட்டுகின்றன. மீண்டும் இனவாதத்தைக் கூர்மையாக்கும் அபாயச் சூழல் ஒன்றுக்கு இந்தச் சக்திகள் முயற்சிக்கின்றன.

இதற்கு ஊடகங்கள்கூடத் துணை நிற்பதே மிகவும் கவலைக்குரியதாகும். நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது இந்த அபாயப் போக்கின் வளர்ச்சியை நாம் தெளிவாகவே பார்க்க முடிந்தது. இந்தப் போக்கு வளர்ச்சியடைவதற்கு யாரும் இடமளிக்கக்கூடாது.

குறிப்பாக மக்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும். ஏனெனில் எப்போதும் மக்களே அதிக பாதிப்பைச் சந்திப்பவர்களாக இருப்பதால், அவரகளே மிகவும் விழிப்பாகச் செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை விரும்புகின்ற தரப்பைச் சேர்ந்தவன் என்ற வகையில், அவசரகாலச் சட்டமானது விரைவில் நீக்கப்படுவதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

# எம்.ஜி.ஆர் கோவில் கும்பாபிஷேக விழா




(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் தீவிர பக்தர் ஒருவர், சென்னையில் அவருக்கு கோவில் கட்டியுள்ளார். அக்கோவிலின் கும்பாபிஷேகம், நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது,

சென்னை, புதுப்பேட்டையை சேர்ந்தவர் கலைவாணன், சிறுவயது முதலே, எம்.ஜி.ஆர்., மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அது நாளடைவில் பக்தியானது. பக்தியை வெளிப்படுத்தும் வகையில், எம்.ஜி.ஆருக்கு கோவில் கட்ட முடிவு செய்தார். அருள்மிகு எம்.ஜி.ஆர்., ஆலயம், நத்த மேடு, செல்லியம்மன் சாலை, திருநின்றவூர் என்ற முகவரியில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

உலகச் செய்திகள்

# பாகிஸ்தானின் செயற்கை கோளை விண்ணில் செலுத்த உதவிய சீனா



(பீஜிங்)

சீனாவின் தொழில்நுட்ப வழிமுறை , நிதி ஆதார உதவிகளுடன் உருவாகிய தொலை தொடர்பு செயற்கைக்கோளை பாகிஸ்தான் விண்ணிற்கு அனுப்பியது.

பாக் சாட்- 1 ஆர் என்ற இந்த செயற்கைக் கோள் பாகிஸ்தான் நாட்டின் விஞ்ஞானிகள் மற்றும் தொழில் நுட்ப வல்லுனர்களால் உருவாக்கப்பட்டது. இதற்கு சீனா ஆலோசனையும், நிதி உதவியும் செய்திருக்கிறது. லாங் மார்ச் 3 பி ராக்கெட் மூலம் நேற்று அதிகாலையில் சீனாவின் ஷிஷாங் அறிவியல மற்றும் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து விண்ணுக்கு ஏவப்பட்டது.

இந்த செயற்கை கோள் சீனாவின் மையத்தில் இருந்து விண்ணிற்கு அனுப்பி வைக்கப்பட்டபோது பாகிஸ்தான் இராணுவ தளபாட பிரிவின் முன்னாள் லெப்டினனட் ஜெனரல் கலீத் அகம்மது கிட்வால், வெளியுறவு செயலர் சல்மான் ஷீர், சீனாவுக்கான பாக்., தூதர் மசூத்கான் மற்றும் இரு நாட்டு அதிகாரிகளும் குழுமி இருந்தனர். செயற்கைகோள் வெற்றிகரமாக பாய்ந்ததும் இரு தரப்பினரும் கை குலுக்கி வாழ்த்து தெரிவித்து கொண்டனர்.

# பிரிட்டனில் கலவரத்தில் ஈடுபட்ட 1300 பேர் பொலிஸாரால் கைது

## - 300பேர் மீது வழக்குப் பதிவு

(லண்டன்)

பிரிட்டனில் ஏற்பட்ட கலவரங்களுடன் தொடாபுடையவர்கள் என்ற சந்தேகத்தில் இதுவரை 1300க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை ரூபாவின் பெறுமதியில் 5000 கோடி வரை சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. லண்டனில் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற கலவரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.லண்டனில் உள்ள டோட்டன்ஹேம் பகுதியைச் சேர்ந்த பிரபல நபரான மார்க் டக்கன் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.


இதையடுத்து அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பொலிஸாருக்கும், டக்கன் ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக வெடித்தது.

டோட்டன்ஹேம் நகரின் பல இடங்களில் உள்ள வணிக வளாகங்கள் உள்ளிட்டவை தீ வைத்து எரிக்கப்பட்டன. இந்த கலவரம் மேலும் சில நகரங்களுக்கும் பரவியது. பிரதமர் டேவிட் கமரூன் இத்தாலி பயணத்தை பாதியில் முடித்து லண்டன் திரும்பினார்.

எந்த விலை கொடுத்தாலும் கலவரத்தை ஒடுக்குவோம் என அவர் உறுதியளித்தார். கலவரம் தொடர்பாக விவாதிக்க நாடாளுமன்றில் அவசர கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.கலவரம் தொடர்பாக நடந்த வி'யங்களை அமைச்சர்கள் எடுத்துரைத்தனர். கலவர பகுதிகளில் பணியில் ஈடுபட்ட பொலிஸாருக்கு உதவ ஸ்கொட்லாந்து பொலிஸார் 250 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.கலவரம் தொடர்பாக ஆயிரத்துமுன்னூறுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 300 பேர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கலவரக்காரர்களை உடனடியாக சிறையில் அடைக்கும் பொருட்டு லண்டன் நீதிமன்றம் நள்ளிரவு முழுவதும் இயங்கியது.



கலவரத்தில் 5000 கோடி ரூபாய்க்கும் அதிகமாக பொருட்கள் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்கான இழப்பீடு காப்புறுதி நிறுவனங்கள் மூலம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



சீனா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைநகர் பீஜிங்கில் அந்நாட்டு பிரதமர் வென் ஜியாபோவை சந்தித்து கலந்துரையாடுவதை காணலாம்.

# முஷாரப் மீது ஒருவார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## - பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் உத்தரவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் மீது ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலுசிஸ்தான் மாகாண உயர்நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.பலுசிஸ்தான் பிராந்திய தலைவர் அக்பர் பக்டி கொல்லப்பட்ட வழக்குத் தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் பலுசிஸ்தான் மாகாண நீதிமன்றத்தில் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி பொலிஸாரின் செயல்பாடு மிகவும் மெத்தனமாக இருப்பதாக அதிருப்தி தெரிவித்தார். ஒரு வாரத்திற்குள் முஷாரப் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார்.கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்பு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி பிரிட்டனில் முஷாரப். வசித்து வருகிறார்

பர்வேஸ் முஷாரப்பை பிரிட்டனிலிருந்து பாகிஸ்தானுக்குக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகாண அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதாக இந்த வழக்கில் ஆஜரான அரசு வழக்குரைஞர் நஸருல்லா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.இது தொடர்பாக சர்வதேச (இன்டர்போல்) பொலிஸ் உதவியை நாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதற்கான கடிதம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதற்கு சிறிது கால அவகாசம் தேவை என்றும் அவர் தெரிவித்தார். அக்பர் பக்டி கொலை வழக்கு தொடர்பான அனைத்து முடிவுகளையும் மத்திய அரசுதான் எடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.



# குறள் சொல்லும் கதைகள் -51

இன்பத்துப் பால்

## துணை இல்லை

ஒருவாரமாக கஜேந்திரன் வித்தியாவைக் காணவில்லை. மூன்று தினங்களுக்கு முன்பு தற்செயலாக அர்ச்சகாவைச் சந்தித்தான் கஜேந்திரன். வித்தியாவைக் காணாவிட்டாலும் அவளது தோழியைக் கண்டதால் வித்தியாவைச் சந்தித்த மகிழ்வு அவனது மனத்தில் உண்டானது.

" வித்தியா பெரிய கண்டத்தில் இருந்து அதிஷ்டவசமாகத் தப்பி விட்டாள். உங்களது நடவடிக்கையைப் பொறுத்துத் தான் வித்தியாவின் வாழ்வு அமையும்" என்றாள் அர்ச்சகா.

கஜேந்திரன் அதைக் கேட்டுப் பதறிப் போனான் "வித்தியாவுக்கு ஆபத்தா" அவனது மனம் துடித்தது. " நீ என்ன சொல்கிறாய் விளங்கும்படி சொல்" என்றான்.

"யாரும் எதிர்பாராதவாறு வித்தியாவின் மாமா வந்து விட்டார். அவர் வந்த மறு நாள் வித்தியாவையும் அவளது தாயாரையும் அழைத்துக்கொண்டு கொழும்புக்குச் செல்லத் தீர்மானித்தார். வித்தியாவின் தாயாருக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது அன்று மாலை தனது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தான் கொழும்புக்குச் செல்வதாகக் கூறி விட்டார். வித்தியா துடித்துப் போனாள். அன்று உங்களைச் சந்தித்த போது நீங்கள் மாமாவுக்குச் சாட்டுச் சொல்லச்சொன்னீர்களாம். சாட்டுச் சொல்ல நேரம் எங்கே இருந்தது. இரவு முழுவதும் விம்மி விம்மி அழுதாள். நான் தான் அவளுக்கு ஆறுதல் சொன்னேன். நானில்லாவிட்டால் அவள் என்ன செய்திருப்பாளோ தெரியாது பாவம் அவள். அவளை நீங்கள் அளவுக் கதிகமாகத் துன்பப் படுத்துகிறீர்கள் என்று சொல்லி நிறுத்தினாள் அர்ச்சகா.

"முக்கியமான இடத்தில் விட்டு விட்டீர்கள் பிறகு என்ன நடந்தது. வித்தியாவின் மாமா கொழும்புக்குப் போய்விட்டாரா? வித்தியா ஏன் என்னைச் சந்திக்க வரவில்லை." கவலையோடு கேட்டான் கஜேந்திரன்.

"பாவம் அவள் இரவு முழுவதும் அழுதாள். கடவுள் தான் உதவி செய்தவர் என்று சொல்ல வேண்டும். இரவு பதினொருமணிக்கு அங்கஜன் தொலை பேசியில் தகப்பனுக்குச் சொன்னான். "தான் ஆறு மாதங்களுக்கு வெளிநாட்டில் ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ளவிருப்பதால் அவரை சகோதரியின் வீட்டில் தங்குமாறு அதன் பின்பு தான் வித்தியா அழுவதை நிறுத்தினாள்."

பெரு மூச்சுவிட்டான் கஜேந்திரன் "பாவம் வித்தியா"

பாவம் பார்ப்பதில் பிரயோசனம் இல்லை. இப்பொழுது வித்தியா வின் தாயார் வித்தியாவை வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. நேற்று நான் வித்தியாவின் வீட்டுக்குச் சென்றேன். அப்பொழுது வித்தியாவின் தாய் சொன்னார்" வித்தியின் போக்கு எனக்குப் பிடிப்பதில்லை இனிமேல் அவளை வெளியே செல்ல விடமாட்டேன் மாமனார் வந்திருக்கிறார். இவள் அடிக்கடி வெளியே சென்று நேரம் தாமதித்து வந்தால் அவர் இவளைப் பற்றி என்ன நினைப்பார். அதோடு வயது வந்த பிள்ளைக்கு வெளியெ என்ன வேலை வீட்டில் இருந்து சமையலைப் பழகு. என்று சொல்லி விட்டேன். ஆறு மாதத்தின் பின் அவளுக்கு திருமணமாகவுள்ளது. சமையலைப் பழகா விட்டால் கரைச்சல்படுவள். ஒரு பெண் தனது கணவனை எப்பொழுதும் அழகால் கவரலாம் என்று நினைக்கக் கூடாது அழ்கு எந்நேரமும் தேவைப்படாது. சுவையான சமையல் தான் ஒரு பெண் தனது கணவனைக் கைக்குள் வைத்திருக்க உதவும் என்றார் என்னைப் பொறுத்தவரை எவ்வளவு விரைவில் அவளைக் கூட்டிச் செல்லுங்கள். இல்லா விட்டால் வித்தியா உங்களுக்குக் கிடைக்க மாட்டாள் என்றாள் அர்ச்சகா.

ஒரு சில நாட்களாக எனது காதலியின் அன்பைப் பெறாமல் வருந்துகின்ற நான் முற்றாக அவளைப் பிரிந்தால் மடலேறுவதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை" என்றான் கஜேந்திரன். அவனது வழிகளில் நீர் நிறைந்தது குரல் கரகரத்தது.

**கே.வி.குணசேகரம்.**

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம் மடல் அல்லது இல்லை வலி. 1131

காதலியின் அன்பைப் பெறாமல் காமத்தால் துன்புற்று வருந்துபவர்களுக்கு மடலேறுவதைத் தவிர வேறு வலிமையான துணை இல்லை.



# ஒரு மாற்று அரசியல் தேர்வுக்கு நாங்கள் ஒன்றிணைய வேண்டும்

**அவசரகாலச் சட்டம் நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை.**

கௌரவ சபாநாயகர் அவர்களே!

நீண்ட காலமாக நீடித்து வரும் அவசரகாலச் சட்டத்தை, முடிவுக்குக் கொண்டு வரவேண்டியதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில், இந்த உரையை ஆற்றுகிறேன்.

ஒரு பக்கத்தில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதைப் பற்றிப் பேசப்படுகிறது. மறுபக்கத்தில் அவர்களே அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான காரணங்களை உருவாக்கி கொண்டிருக்கின்றனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம், அவசரகாலச் சட்டத்தை அடிப்படையில் எதிர்க்கின்றோம் என்பதை இந்த அவையிலே தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். அவசரகாலச் சட்டத்தை நடைமுறை ரீதியாக நீக்குவதற்காகவே நாங்கள் பாடுபடுகின்றோம். நாட்டிலே நிரந்தர அமைதியும் முழுமையான இயல்புச் சூழலும் உருவாகும்போது இந்த மாதிரியான நெருக்கடிகள் தானாகவே தீர்ந்து விடும்.

ஆனால், நாட்டிலே அமைதி நிலை உருவாகுவதைச் சிலர் விரும்புவதில்லை. அவர்கள் எப்போதும் இனமுரணை வளர்த்து, பிரச்சினைகளை உருவாக்கி, அதிலேயே பிழைப்பு நடத்த விரும்புகின்றனர்.

இப்படி அமைதிக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டு ஜனநாயகத்தைப் பற்றியும் தீர்வைப் பற்றியும் எப்படிச் சிந்திக்க முடியும்?

இவர்கள், அமைதியைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால், மறு பக்கத்தில் அமைதியைச் சீரழிக்கும் விதமாக நடந்து கொள்வார்கள். ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால், அந்த ஜனநாயகத்துக்கே விரோதமாகச் செயற்படுவார்கள். ஊடக சுதந்திரத்தைப் பற்றிப பேசுவார்கள். அப்படிப் பேசிக் கொண்டே ஊடகங்களைத் தவறாக வழிநடத்துவார்கள்.

**முரண்பாடுகளும் பிரிவுகளும் பிரச்சினைகளும் இருக்குமானால், அது மீண்டும் அழிவுக்கும் நெருக்கடிக்குமே வழியேற்படுத்தும். ஆகவேதான் நாம் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறோம். நடைமுறைக்குச் சாத்தியமான மாற்றங்களைப் பற்றிக் கதைக்கின்றோம்.**

இதுதான் இந்த நாட்டின் அவல நிலையாகும். இதுதான் இந்த நாட்டை மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

மக்களை ஏமாற்றி, நாட்டைச் சீரழிக்கும் மிக மோசமான அரசியலை முன்னெடுப்போர், இன்னும் திருந்தவேயில்லை. இவர்களை மக்கள் இன்னும் அடையாளங் காணாமல் இருப்பதே வேதனைக்குரியது.

மக்களை ஏமாற்றும் காரியங்கள் தொடர்ந்தும் இந்த நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருப்பதை முற்போக்காகச் சிந்திப்போர் புரிந்து கொள்வர்.

பெரும்பாலான பத்திரிகைகள் மக்களை முட்டாள்களாக வைத்திருக்கவே விரும்புகின்றன.

அரசியல்வாதிகளுக்கு நிகராகச் சில பத்திரிகையாளர்கள் நடந்து கொள்கின்றனர். ஊடகங்கள் மக்களுக்கு உண்மைகளைச் சொல்ல வேண்டும். மக்களை ஏமாற்றக்கூடாது. மக்களை அழிவுப்பாதைகுத் தள்ளக் கூடாது. மக்களுக்குத் துரோகமிழைக்கக் கூடாது.

போருக்குப் பின்னர் உருவாக வேண்டிய நிரந்தரத் தீர்வுக்காகவும் அமைதிக்காகவும் நியாயமான வழிவகைகளைப் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை ஊடகங்கள் வெளிப்படுத்த வேண்டும். அத்தகைய பணிகளைச் செய்வதே இந்த நாட்டுக்கு இன்று அவசியமான பணியாக இருக்கிறது.

சில ஊடகங்கள் பல சவால்களின் மத்தியில் இந்தப் பணியைச் செய்து வருகின்றன. அவற்றை நாம் பாராட்ட வேண்டும்.

அரசியல் என்பது ஆக்கத்தையும் தரும். தவறினால், தவறாக தெரிவுகளைச செய்தால், அது அழிவையும் தரும் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். ஊடகத்துறை என்பது மகத்தான பணிக்குரிய ஒரு மாண்புடைய துறையாகும். ஆனால், அதைப் புரிந்து கொள்ளாத பலர தங்கள் விருப்பங்களையே முதன்மைப் படுத்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கிறார்கள். அப்படிச் செய்வது ஊடகத்துறைக்குச் செய்யும் அநீதியாகும். உண்மை, நடுநிலை, சத்தியம், யதார்த்தம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டே ஊடகங்கள் இயங்க வேண்டும். அவசரகாலச் சட்டத்தினால் ஊடக சுதந்திரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான காரணங்களைப் பேணுவதில் ஊடகங்களும் பங்காற்றியிருக்கின்றன.

அண்மையில் - யாழ்ப்பாணத்திலே குகநாதன் என்ற ஒரு மூத்த ஊடகவியலாளர் தாக்கப்பட்டுள்ளார். இனந்தெரியாதவர்களால், இந்தப் பத்திரிகையாளர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை நான் கண்டிக்கிறேன். இந்தத் தாக்குதலைச் செய்தவர்களைக் கண்டு பிடித்துச் சட்டத்தின் முன்னே நிறுத்த வேண்டும்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் தனியே குகநாதன் என்ற ஊடகவியலாளரையோ, ஒரு தனி மனிதரையோ மட்டும் தாக்கவில்லை. அவர்கள் இந்த நாட்டின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றனர். இயல்பு வாழ்க்கையின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் மக்களுடைய நம்பிக்கையின் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். ஊடகச் சுதந்திரத்தின் மீது தாக்குதல் செய்திருக்கின்றனர். இந்த நாட்டின் ஜனநாயகத்திற்குச் சவாலாக இருக்கின்றனர். அதாவது, இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் அரசாங்கம் உருவாக்கி வருகின்ற நன்மையான காரியங்களுக்கெல்லாம் எதிராகச் செயற்பட்டிருக்கிறார்கள்.

ஆகவேதான், அவர்களைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன்னே நிறுத்த வேண்டும் என்று கூறுகிறேன்.

யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை தொடர்ச்சியாக இத்தகைய அச்சுறுத்தலுக்குள்ளாகுவதையிட்டு என்னுடைய கவலைகளையும் இங்கே பதிவு செய்கிறேன்.

திரு. குகநாதன் என்னுடன் மிக நெருக்கமாகப் பழகியிருக்கிறார். அவர் பணியாற்றும் பத்திரிகை நிறுவனத்தின் விருப்பங்களுக்கு அப்பாலும் அவர் எம்முடன் உறவைக் கொண்டிருந்தவர். பல சந்தர்ப்பங்களில் பல விடயங்களைப் பற்றி அவர் எம்முடன் மனந்திறந்து பேசியிருக்கிறார்.

அப்படியான ஒருவர் மீது நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பெரும் சிரமங்களின் மத்தியில் உருவாகி வருகின்ற இயல்பு வாழ்வையும் அமைதிச் சூழலையும் கெடுப்போரை நாம் அனுமதிக்கவே முடியாது.

நாங்கள் அமைதிக்காக உழைக்கிறோம். ஜனநாயகச் சூழல் ஒன்றை வலுப்படுத்துவதற்காகப் பாடுபடுகிறோம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எம்மையும் எமது ஆதரவாளர்களையும் சீண்டும் விதமாகப் பலர் நடந்து கொண்டனர். குறிப்பாக எமக்கு எதிராகப் போட்டியிட்ட தரப்பினர் மக்களைக் குழப்பும் விதமான பரப்புரைகளிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் பலவற்றைக்கூடச் செய்திருந்தனர்.

ஆனால், இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு, நாம் ஜனநாயகத்தைப் பேணும் வழிகளில் உறுதியாக நின்றோம்.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் கூட இவர்களுடைய மோசமான நடவடிக்கைகள் தொடர்ந்தன.

பொய் பிரச்சாரங்களும், கட்டுக்கதைகளும், வதந்தி பரப்புதல்களும் என்று அமைந்திருந்த அந்த நாட்களின் நடவடிக்கைகள், நிச்சயம் நல்லதொரு அரசியலுக்கான வழிமுறையை உருவாக்கப் போவதில்லை.

அதிலும் இளைய தலைமுறையினரைப் பலியிடும் ஒரு தேர்தலையே இந்தத் தேர்தலில் அந்தச் சக்திகள் பயன்படுத்தின என்பதையும் இங்கே, இந்த மன்றிலே வேதனையுடன் பதிவு செய்கிறேன். இந்தத் தவறான தேர்வுக்காக நாளைய சமூகம் வருந்த வேண்டிய நிலை உருவாகக் கூடிய அபாயமே தெரிகிறது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இந்த அவசரகாலச் சட்ட நீடிப்பானது அடுத்த தலைமுறைகளுக்கும் பரிமாறப் படக்கூடாது என்பதே எமது விருப்பமாகும். இதை இங்கே நான் அழுத்தமாகக் குறிப்பிடுகிறேன்.

அவசரகாலச் சட்டமானது ஜனநாயக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடியது என்பதால் நிச்சயம் இதை நாம் நீக்கியே ஆகவேண்டும். ஆனால், அதற்கான சூழலையும் நாம் உருவாக்க வேண்டும் என்பதே நாம் கவனிக்க வேண்டியது.

அமைதியைப் பற்றிக் கதைப்பது முக்கிய மானதல்ல. அமைதிக்காக உழைக்க வேண்டும். தீர்வைப் பற்றிப் பேசிக் கொணடிருப்பது முக்கியமானதல்ல. தீர்வொன்றைப் பெறுவதற்காக நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் பாடுபட வேண்டும்.

அப்படியே அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கான சூழலையும் நாம் அனைவரும் இணைந்து உருவாக்க வேண்டும்.

இந்த நாட்டிலே இப்போது தேவைப்படுவதெல்லாம், ஒருங்கிணைந்த செயற்பாடுகளே. ஒருங்கிணைந்த செயற்பாடுகளின் மூலமே மக்களுக்கு நன்மைகளைச் செய்ய முடியும். அவற்றின் மூலமே இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

எனினும் முரண்பாடுகளும் பிரிவுகளும் பிரச்சினைகளும் இருக்குமானால், அது மீண்டும் அழிவுக்கும் நெருக்கடிக்குமே வழியேற்படுத்தும்.

ஆகவேதான் நாம் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறோம். நடைமுறைக்குச் சாத்தியமான மாற்றங்களைப் பற்றிக் கதைக்கின்றோம்.

இன்று நாங்கள் மாற்று அரசியல் தேர்வுக்குச் செல்ல வேண்டும். இந்த நாட்டிலே அமைதியைப் பற்றிச் சிந்திக்கும் ஒரு பெரும்போக்கை நாம் உருவாக்க வேண்டும். இதுவே இன்று அவசியமாகும் என நம்புகிறேன்.

உலகப் போக்குகளை விளங்கிக் கொண்டு, இலங்கைத்தீவின் யதார்த்தத்துக்குப் பொருத்தமான அரசியல் தேர்வுக்குக் கருத்தொற்றுமையுடன் நாம் செயற்படுவது இன்றைய அவசியமாகும்.

மக்களுக்காகவே கட்சிகளின் இணைவுகள் இருக்க வேண்டும். கட்சிகள் எடுக கின்ற அரசியல் தீர்மானங்கள் எல்லாம் மக்களுக்கு நன்மை தருவதாக அமைய வேண்டும்.

ஆனால், சில கட்சிகள் எடுக்கின்ற தீர்மானங்கள் எல்லாம் கட்சியினர்களுக்கான நன்மைகளைக் கொடுத்துள்ளனவே தவிர, மக்களுக்கு நன்மைகளைக் கொடுத்ததாக இல்லை.

**மக்களை ஏமாற்றி, நாட்டைச் சீரழிக்கும் மிக மோசமான அரசியலை முன்னெடுப்போர், இன்னும் திருந்தவேயில்லை. இவர்களை மக்கள் இன்னும் அடையாளங் காணாமல் இருப்பதே வேதனைக்குரியது.**

ஆகையால்தான் மக்கள் நம்பிக்கையோடு வாக்களித்த பிறகும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழவேண்டியேற்பட்டது.

கடந்த காலங்களில் தமிழ்மக்கள் ஒன்று பட்டு நின்றே தங்கள் ஆதரவை தமிழ்க்கட்சிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆனால், மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றுக் கொண்ட இந்தக் கட்சிகள், மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொடுத்தனவா? அல்லது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் எவ்வளவு தூரம் அர்ப்பணிப்போடும் விவேகத்தோடும் சகிப்புணர்வோடும் நடந்து கொண்டன?

இதையே இன்று நாம் சிந்திக்க வேண்டும்.

தொடர்ந்தும் யாரும் பழைய வாய்ப்பாடுகளையே பாடிக் கொண்டிருக்க முடியாது. உலகம் மிக வேகமாக வளர்சசியடைந்து செல்கிறது. உலகத்தின் போக்குகளும் நிலைமைகளும் மாற்றங்களுக்குள்ளாகி வருகின்றன.

இதைப் புரிந்து கொண்டதால், பின்தங்கிய நிலையில் இருந்த சமூகங்கள் எல்லாம் மிகவும் விரைவான முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் எட்டியுள்ளன.

ஆனால், இலங்கையின் நிலைமைகள் இன்னும் நெருக்கடிக்குள்ளேயே இருக்கின்றன. இது எதனைக் காட்டுகிறது. இதையே இன்றைய இலங்கை மக்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களுடைய மனவுணர்வுகளையும் அவர்களுடைய எதிர்காலத்தையும் பொறுப்போடு புரிந்து கொண்டு, அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்க வேணடிய மிக முக்கிய கட்டத்தில் இன்று நாங்கள் இருக்கிறோம்.

ஆனால், இதற்குச் சில அரசியல் சக்திகள் இணங்கி வருவதில்லை. அவர்களுக்கு மக்களுடைய தேவைகளும் மன விருப்பங்களும் என்னவென்று தெரிவதில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் அடிப்படைத் தேவைகள் உலக வங்கியிடம் கோரிக்கை

யாழ்.மாவட்டத்தில் மீள் குடியமர்ந்த மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதி உதவிகள் குறித்து உலக வங்கி அதிகாரிகளுடன் ஆராயப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உலக வங்கியினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைவிட மேலதிகமாக மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 2600 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உலக வங்கி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அன்று யாழ். செயலகத்தில் உலக வங்கி அதிகாரிகளுக்கும் யாழ். அரச அதிபரிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிலேயே அரச அதிபர் இவ்வேண்டு கோளை விடுத்திருக்கின்றார்.

உலக வங்கியானது யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இதைத் தவிர யாழ். மாவட்டத்தில் அண்மையில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

மேலும் மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர். அது தவிர, கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கும் அதிக நிதி தேவைப்படுவதாகவும் யாழ். அரச அதிபரினால் உலக வங்கி அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டப்பட்டு இந்நிதிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# தந்திரமான திருட்டு நெல்லியடியில் சம்பவம்

நெல்லியடியிலுள்ள தனது மனைவியைப் பார்ப்பதற்குச் செல்வதாகக் கூறி நண்பனிடம் இரவலாக மோட்டார் சைக்கிளை வாங்கிய நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் தப்பி தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக அவரது மனைவியிடம் சென்று நண்பர் கேட்டதற்கு மனைவி தம்மிடம் வரவில்லை என தெரிவித்ததாகவும் இதனை அடுத்து அவர் பொலிஸில் முறைப்பாடு செய்ததாக் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் தற்போது பளையில் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்ததை அடுத்து மோட்டார் சைக்கிளை பறிகொடுத்தவர் பொலிஸாருடன் பளைக்குச் சென்று தேடி விசாரித்தபோது அவர் அங்கும் இல்லை என தெரியவந்தது. இச்சம்பவம் நடைபெற்று ஐந்து நாட்கள் கழிந்துள்ள நிலையில் இதுவரை மோட்டார் சைக்கிள் உரியவரிடம் வந்து சேரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக குறித்த நபரைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மகப்பேற்று விடுதி

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு மல்லாவி மருத்துவமனையில் மகப்பேற்று விடுதியினை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மல்லாவி மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் வே.விஜயகுமார் தெரிவித்தார்.

இவ்வைத்தியசாலையில் இதுவரை மகப்பேற்று விடுதி இல்லாமையால் பிரசவத்திற்காக வருபவர்களில் முதலாவது பிரசவத்திற்கென வருபவர்கள் கிளிநொச்சி, வவுனியா மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வண்டியில் அனுப்பி வந்ததுடன் இரண்டாம், மூன்றாம் பிரசவத் தாய்மார்களை மல்லாவி மருத்துவமனையில் தங்கவைத்துச் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

இதனால் தூர இடங்களிலிருந்து வரும் மகப்பேற்று தாய்மார்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு இம்மகப்பேற்று விடுதி அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(121)

# சுயதொழில் கொடுப்பனவு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் அங்கவீனமுற்றோருக்கான சுயதொழில் கொடுப்பனவில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைப் பெறுபவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உடனடியாகச் சென்று பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா தெரிவித்துள்ளார்.

காசோலையைப் பெறுபவர்களின் விபரம் வருமாறு,

பொன்னன் ஞானசௌந்தரி - இளவாலை, செனஜீட் - இளவாலை, ஸ்ரீ முருகன் ரஜிதா - மாசியப்பிட்டி, இராமலிங்கம் கணேசலிங்கம் - சண்டிலிப்பாய், இராஜ்குமார் யதுஷா - சண்டிலிப்பாய், பொன்னுத்துரை ஜெயக்குமார் - சுதுமலை, ஸ்ரீகந்தராஜா - மாசியப்பிட்டி, குகதாஸ் தவமணி - நவாலிவடக்கு (104)

## கிழக்கில்...

மக்கள் வளைத்துப் பிடித்தனர். இச்சந்தேக நபர்களை திருக்கோவில் பொலிஸார், திருக்கோவில் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அந்நபர்களை தம்மிடம் ஒப்ப டைக்கக்கோரி பொலிஸ் நிலையத்தை பொதுமக்கள் சூழ்ந்தனர்.

அம்மக்களை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டதுடன் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். இதனால் இருவர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை, பொத்துவில் பொலிஸ் நிலையத்தை சூழ்ந்திருந்த பொதுமக்களை கலைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளனர்.

இத் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக அலியார் முகமது மஹ்ஜீன் என்பவரே பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகப் பொலிஸார் ஊடர்கு சட்டம் பிரயோகித்துள்ளனர்.

**காத்தான்குடியில் பொலிஸ் அறிவிப்பு...**

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மர்ம மனிதர்கள் எவரேனும் பிடிபட்டால் அவர்களை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறும் இது குறித்து யாரும் அச்சமடைய தேவையில்லையென்றும் காத்தான்குடி பிரதேசத்திற்குட்பட்ட பொதுமக்களுக்கு பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் நேற்று அறிவுறுத்தியுள்ளனர்.

**பாதுகாப்புச் செயலாளர்...**

பொதுமக்கள், சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டால், பொலிஸ் நிலையங்களைத் தாக்கினால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

"அண்மைய நாட்களில் கிறீஸ் பூதங்கள் என்று கூறப்படு பவர்கள் தொடர்பாக அப்பாவிகளும், பொலிஸாரும் பொதுமக்களால் தாக்கப்படும் சம்பங்களை நாம் கண்டுள்ளோம். இத்தகைய நடவடிக்கையை மக்கள் எதிர்காலத்தில் மேற்கொண்டால் அவர்களுக்கு எதிராக நாம் கடும் நடவடிக்கை மேற்கொள்வோம்" என பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ கூறினார்.

## யாழ்.தனியார்...

நடைமுறைகள் தொடர்பாக கடந்த வருடமும் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் இந்த நடைமுறைகள் தொடரப்படவில்லை. இந் நிலையிலேயே மீண்டும் இந்த வருடம் பயணச்சீட்டை வழங்குவது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் பயணச்சீட்டை வழங்கும் நடைமுறை வழமைக்கு வரும் எனவும் சீட்டை வழங்காவிடில் ஆயிரத்து 500 ரூபா முதல் 15ஆயிரம் ரூபாவரை தண்டப்பணம் அறவிடப்படுமிடத்து குறித்த பஸ் வண்டிக்குரிய பயண வழி அனுமதி ரத்துச் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பளை மாசார்...

சந்திரகுமார், மாகாண ஆளுநர ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அழகான கட்டிடங்களை நிர்மாணித்து வழங்கியுள்ளதுடன் இப்பாடசாலைக்குரிய ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு முன்வந்திருக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கும் அம் மக்களுக்கும் அந்நாட்டின் இலங்கைக்கான தூதுவர் காதி க்லுக்மன்ட் ஊடாக எமது மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றைய நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசம் போரின் வடுக்களில் இருந்து மீண்டெழவும், எமது சிறாரின் கல்விக்கும் அற்புதமானதோர் அமைதிச் சூழ் நிலையை ஜனாதிபதி உருவாக்கித்தந்துள்ளதற்காக அவருக்கும் எமது மக்கள் சார்பாக நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# போலி நாணயத்தாள் யாழ். குடாநாட்டில் தாராளம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் போலி நாணயத்தாளின் புழக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் புதிதாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட ஐந்து ஆயிரம் ரூபா, ஆயிரம் ரூபா மற்றும் ஐந்நூறு ரூபா போன்ற நாணயத்தாள்களைப் போன்று இந்த போலி நாணயத்தாள்களும் நடமாடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த போலி நாணயத்தாள்களினால் மக்கள் சிலர் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

வங்கிகளில் பணம் வைப்பிலிடச் செல்பவர்களின் நாணயத்தாள்கள் கடும் பிரச்சினைக்குப் பின்னரே அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இந்த போலி நாணயத்தாள்களினால் மக்கள் மிகவும் அவதானத்துடனும் விழிப்புடனும் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வி)

# வைத்திய கலாநிதி ஜெயக்குமாரனுக்கு "யாழ் விருது" வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை வருடாந்தம் வழங்கிவரும் "யாழ். விருது" இமுறை புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன் பெறவுள்ளார் என யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லைக்குமரனின் 19 ஆவது மலர் வெளியீடு எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறுகின்ற யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுக் கூட்டத்தில் சிறந்த சமூகசேவையாளர் பற்றி ஆராயப்பட்டபோது புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன் பற்றியும் ஆராயப்பட்டது.

இதனை அடுத்து இந்த ஆண்டுக்கான "யாழ். விருது" டாக்டர் என்.ஜெயக்குமாரனுக்கே வழங்கப்படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இவர் சிறந்த சமய, சமூக பணிகளில் ஈடுபடுவது மட்டுமன்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் பொதுமக்களுக்கான தனது வைத்தியசேவையை வழங்கிவருகின்ற நிலையில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார் என்றார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவின்போது டாக்டர்.என். ஜெயக்குமாரனுக்கும் விருது வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா சிறப்பு விருநதினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் வசந்தி அரியரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் முதற்பிரதி துர்க்கா மணிமண்டபத்திற்கும், சிறப்புப் பிரதி தொழிலதிபர் இ.ச.பே.நாகரத்தினம் அவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவித்தார். (எஸ்)

செய்திப்பாணம்

**சிற்பிசிவப் பிரகாசம் செதுக்கிய சங்கிலிசிலை பொற்புறப் பண்ணினார் புருஷோத்தமன் - அற்புதமாம் புரவியின் கச்சிதம்; புல்லரிக்கும் நாண், வாள் கரங்களில் இலங்கின்ற கணை!**



# மாணவர்களுக்கு மந்த போசாக்கு சத்துணவு வழங்க நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் கணிச மானவர்கள் போசாக்கு குறை பாடுடையவர்களாகக் காணப்படு வதாக ஆய்வுகள் தெரிவிக்கின் றன. இதனைத் தொடர்ந்து இம் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டமொன்றுக்காக அரசு மேலதிக நிதி ஒதுக்கீட் டைச் செய்துள்ளது.

17 சதவீதமான மாணவர்க ளுக்கு ஊட்டச்சத்து பற்றாக் குறை காணப்பட்டதனால் மாண வர்களுக்கு மதிய உணவு வழங் குவதற்காக 250 மில்லியன் ரூபா வினை ஒதுக்கவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.


7779 பாடசாலைகளில் கல்வி கற்கும் 1,088,890 மாணவர்களுக்கு இவ்வாறு உணவு வழங்கப்பட வுள்ளதாக பிரதிக் கல்வி அமைச் சர் விஜித் விஜயமுனி சொய்சா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

## உலக சாதனை

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச இளைஞர் ஆண்டை கொண்டாடும் வகையில் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் உலக மாற்றங் கொணர்வோரின் இலங்கை அணியானது நேற்று சர்வதேச இளை ஞர் தினத்தையிட்டு உலக சாதனையொன்றை நிகழ்த்தியது.

1250 பேர் ஒழுங்காக வரிசையில் நின்று ஒரு சொல்லை அமைத் ததனால் பிரான்ஸ் தற்போது ஓர் உலக சாதனையை நிலைநாட்டி யுள்ளது. 1500 இளைஞர்களை நிற்கவைத்து 'YOUTH' என்னும் சொல்லை அமைத்தமையால் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் உலக மாற்றங் கொணர்வோர் அமைப்பு புதிய உலக சாதனையை நிகழ்த்தியுள்ளது.

# மேலும் ஒரு தொகுதி முன்னாள் புலிகள் விடுதலை



(வவுனியா)

வன்னியில் இடம்பெற்ற இரா ணுவ நடவடிக் கையின் போது பாதுகாப்பு படை யினரிடம் சரண் அடைந்த முன் னாள் போராளி களில் கடந்த 2 ஆண்டு காலம் புனர்வாழ்வு பெற்ற 150 பேர் நேற்றுக் காலை வவுனியா நகர சபை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் சமூகத்துடன் இணைக்கப்பட்டார்கள்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புனர்வாழ்வு நிலையங்களுக்கு பொறுப்பான இராணுவ உயர் அதிகாரிகளும் போரா ளிகளுடைய பெற்றோர்களும் உறவினர்களும் கலந்துகொண்டனர்.

புனர்வாழ்வு நிலையங்களில் எஞ்சியுள்ளவர்களும் இவ்வாண்டு முடிவிற்குள் சமூகத்துடன் இணைக்கப்"'டுவார்கள் எனத் தெரிய வருகிறது. இன்னமும் 2600 போராளிகளே புனர்வாழ்வு நிலையங் களில் உள்ளனர் என குறிப்பிடப்படுகின்றது. (39)

# இளைஞர் நாடாளுமன்றம் யாழ். உறுப்பினர்கள் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத் தப்பட்ட இளைஞர் நாடாளுமன் றத்திற்காக யாழ்ப்பாணம் மாவட் டத்தில் இருந்து தெரிவு செய்யப் பட்ட உறுப்பினர்கள் அண்மை யில் அநுராதபுரத்தில் நடை பெற்ற இளைஞர் நாடாளுமன்ற அமர்வின்போது சத்தியப்பிர மாணம் செய்துள்ளனர்.

யாழ். மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரம் வருமாறு,

நவதர்சன் - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிரி சேந்திரா - ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, சயந்தன் - காரைநகர் உதவி அர சாங்க அதிபர் பிரிவு, குணேஸ்- சங்கானை பிரதேச செயலாளர் பிரிவு, சிவச்செல்வம் - கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவு, ஸ்ரீ ராகவன் - வேலணை பிரதேச செயலாளர் பிரிவு, விமலதாஸ்- சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு, ரவீந்திரன் - நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு, நஜீ தரன் - கோப்பாய் பிரதேச செய லாளர் பிரிவு, மக்ஸ்மில் - யாழ்ப் பாணம் பிரதேச செயலா ளர் பிரிவு, அனுசன் - தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவு, சுபாகர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு, யுகராஜ் - உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு

# துணுக்காயில் திறந்த பாடசாலை

(அம்பலப்பெருமாள்)

மத்திய கல்வி அமைச்சு மற் றும் தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் திறந்த பாடசாலை ஒன்று ஆரம் பித்து வைக்கப்படவுள்ளது.

இப்பாடசாலையின் ஆரம்ப விழா இன்று காலை 8.30 மணி க்கு மல்லாவி மத்திய கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபரும் சிரேஷ்ட போதனாசிரியருமான செல்வி தேவி அன்னராணி சந்திரசேகரம் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் முத ன்மை விருந்தினராக தேசிய கல்வி நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திருமதி நந்தா வன்னியாராய்ச்சி கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண முறைசாரா கல்வி உத விக் கல்விப் பணிப்பாளர் சி. கமலராஜன் கலந்துகொள்ளவுள் ளார்.

# யாழ். நோக்கி படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு வருகைதரும் தென்பகுதி சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துக் காணப் படுகின்றது.

தற்போதைய பாடசாலை விடுமுறையைப் பயன்படுத்தி தினமும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பயணிகளின் வருகையால் ஆலய சூழலில் பக்தர்களின் நெரிசலும் அதிகரித்துள்ளது. இந்த சுற்றுலாப் பயணிகள் தேங்காய் உடைத்தும், கற்பூரம் கொழுத்தியும் கந்தனை வணங்கிச் செல் கின்றனர். (வி)

## இரத்ததானம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக் கழகம் இரத்ததான நிகழ்வினை நாளை பருத்தித் துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடாத்த ஒழுங் குகள் மேற்கொண்டுள்ளது.

குருதிக்கொடையாளர் நாளை காலை 7.00 மணிக்கு சமுகம ளித்து குருதி வழங்கலாம். 18 வயது தொடக்கம் 60 வயது வரை யுள்ள இருபாலரும் குருதியை வழங்கலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது. (109)

# கொள்ளுப்பிட்டியில் ஆணின் சடலம் மீட்பு


கொள்ளுப்பிட்டி ரயில் நிலையத்திற்கு அருகில் ரயில் பாதையில் இருந்து வெளிநாட்டவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தலையில் காயங்களுடன் உயிரிழந்திருந்த இந்த நபரின் ஆடைகள் சற்று தூரத்தில் கிடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று அதிகாலை அளுத்கமவிலிருந்து கொழும்பை நோக்கி பயணித்த ரயிலின் சாரதி சடலத்தை கண்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

குறித்த நபரின் மரணத்தில் ஏதேனும் மர்மம் இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# மரண அறிவித்தல்கள்



உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**செபஸ்தியாம்பிள்ளை தியடோர்**

**[பவளத்துரை]**

அன்னார் காலஞ்சென்ற செபஸ் தியாம்பிள்ளை அன்னபூரணம் தம்பதிக ளின் மூத்த புதல்வனும், ஞானம்மாவின் (மனோன்) அன்புக் கணவரும், திரேசம்மா காலஞ்சென்றவர்களான தேவராசா (சின்னன்), அலோசியஸ் (நக்கினி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கொலின் (ஜேர்மன்). சுனித்தா, விஜிதா, நிரூஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கெலன் (ஜேர்மன்) அன்ரனிதாஸ், அசன் (பூபதி பேக்கரி) ஆகியோ ரின் மாமனாரும் ஸ்ரெபி, அனோஜினி, அனிஸ்ரன், அஸ்வின், றிஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 14.08.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆனையூர் அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உயரப்புலம்,**
**ஆனைக்கோட்டை.** (C/124) **தகவல்** **மகன் (நிரூஜன்)**

## அமரர் கந்தசாமி கஜிவன் (கஜன்)

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கஜிவன் (யாழ். பல்கலைக் கழக ஊழியர்) நேற்றுமுன்தினம் (11.08.2011) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் கந்தசாமி - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவரான வதனாவின் அன்புச் சகோதரனும், செந்திலின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோண்டா வில் கொட்டைக்காடு இந்து மயானத்தில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.


**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.** (C/125) **தகவல்** **வாசுதேவன் கோபிநாத்**

**சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி**



**பங்களாதேஷ் 184 (48.4 ஓவர்கள்)**
**சிம்பாப்வே 186/6 (41.2 ஓவர்கள்)**
**4 விக்கெட்டுக்களால் வெற்றி**

**இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் மூன்றாம் நாள் ஆட்டம்**



**இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 710/7d**
**இந்தியா இரண்டாவது இனிங்ஸ் 35/1**

# மருந்துப் பெட்டகம் போதனா மருத்துவமனைக்கு

புற்றுநோய்க்குப் பயன்படுத் தப்படும் உயர்ரக மருந்துகளைப் பாதுகாத்து வைப்பதற்கு பயன் படுத்தப்படும் 3 மில்லியன் ரூபா பெறுமதியான பாதுகாப்புப் பெட் டகக் கருவியொன்றை சுகாதார அமைச்சு யாழ். போதனா வைத் தியசாலைக்கு வழங்கியுள்ளது.

கடந்த புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட இக்கருவி நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சு அதிகாரிகளினால் வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜாவிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கருவி யாழ். போதனா வைத்தியசாலையின் 26 ஆம் இலக்க புற்றுநோயாளர் விடுதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரி னால் இத்தகைய இரண்டு கரு விகளைத் தந்துதவுமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தது. அதற்கமை வாக முதலில் இத்தகைய ஒரு கருவி சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (பா)

# இந்திய மீனவர் சடலம் அடையாளம் காணப்பட்டது

(கொழும்பு)

மன்னார், சௌத்பார் பிரதே சத்தில் கடந்த 2 ஆம் திகதி கரையொதுங்கிய இந்திய மீனவ ரது சடலம் அடையாளம் காணப் பட்டுள்ளது.

அவர் தமிழகம் நாகர்கோவில், மேல்முற்றத்தை சேர்ந்த வீன் அந்தோனி என அடையாளம் காணப்பட்டுள்ளார். கடந்த இரண் டாம் திகதி சடலம் கரை ஒதுங்கி யதைத் தொடர்ந்து, இது தொடர் பில் இந்திய உயர்ஸ்தானிகர கத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர், இந்திய உயர் ஸ்தானிகரகத்தின், யாழ்ப்பாண பிராந்திய கிளையின் அதிகாரி வினோத் சர்மாவின் ஏற்பாட்டில் அவர் அடையாளம் காணப்பட் டுள்ளார். அவரது சடலத்தை கடற் படையினரின் உதவியுடன் தமிழ கத்தில் இருந்து வந்த அவரின் உறவினர்கள், தலைமன்னாரில் வைத்து பொறுப்பேற்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.